# சஞ்சீவி

மலர் 36

# CHANCHIVE



HENRIK SAXGREN Z. MAJ

1997...............................................................................

**மலர் : 36**

# உள்ளே...

வயோதிப அகதிகளின் பிரச்சனை...
பக்கம்:4

அம்மா ஒருத்தி இருக்கிறாள்.....
பக்கம்:13

வாழ்க்கைப் போராட்டமும் தற்கொலையும்....
பக்கம்:18

சொல்லக் கொதிக்குது நெஞ்சம்....
பக்கம்:27

இந்தியாவில் தமிழீழ அகதிகளின் நிலை....
பக்கம்:41

சமூக மாதிரியை உடைத்தவர்கள்....
பக்கம்:45

அட்டைப்படம்....

இரந்து கேட்பினும்
குழந்தை(த்) துப்பாக்கியால் பேசும்
காலமிது இனியும் நிஜமாய் தொடரின்...!

**HENRIK SAXGREN**
**TID**
-OM FOTOJOURNALISTIK

நன்றி.

ஒவ்வொரு மனிதனுக்கும் மொழி என்ற ஊடகம் எவ்வளவுக்கு முக்கியமானதோ, அதே போல் கருத்துப் பரிமாற்றம் என்பதும் மிக முக்கியமானது. இதன் மூலமே ஒவ்வோர் மனிதனின் கருத்துக்களி னையும், சிந்தனைகளையும் எழுத்தாக, சொற்பிரயோ கமாக வெளிப்படுத்தி மற்றவர்களை சிந்திக்க வைக்கவும், புதிய சிந்தனைகளை வளர்த்தெடுப் பதற்குமான ஊடகங்களாக சிறு பிரசுரங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், வானொலி, கணணி வலை அலைத் தொடர்பு இப்படி பல மக்கள் தொடர்புச் சாதனங்கள் இயங்கி வருகின்றன.

இந்த வகையில் சஞ்சீவியும் தன்னால் இயன்ற இலக்கிய கருத்துப் பரிமாற்றத்தினைச் செய்து கொண்டிருப்பது பற்றி யாவரும் அறிந்ததே. இருந்தும் சில காலங்களாக சஞ்சீவியின் வெளியீட்டில் ஓர் மந்தப் போக்கு ஏற்பட்டிருந் தமையினையும் நீங்கள் அறிவீர்கள். இது ஒவ்வொரு சஞ்சீவி வாசகருக்கும் எரிச்சலை உண்டு பண்ணக் கூடியதாகவும் இருப்பதில் சந்தேகமில்லை. இதற்கான காரணங்களை எழுதி, சஞ்சீவி ஆசிரியர் குழுவினை நியாப்படுத்த நாம் முன்வரவில்லை. ஆயினும் சில விடயங்களை உங்கள் முன்வைத்தேயாக வேண்டும்.

முதலாவதாக பொருளாதாரம். இது சஞ்சீவியின் வெளிவருகைக்கு பெரிய முட்டுக்கட்டையாக உள்ளது.

அடுத்ததாக ஆக்கங்கள். தரமான ஆக்கங்கள் இன்று எமக்கு பற்றாக் குறையாக உள்ளது.

இவையிரண்டும் ஒருங்கமைந்து கிடைக்கு மிடத்து சஞ்சீவி செழுமையுடனும், காத்திரமாகவும் வெளிவரும் என்பதில் சந்தேகமில்லை.

அன்பான சஞ்சீவி வாசகர்களே !

நீங்களே சஞ்சீவியின் செழுமைக்கும், தொடர்ச்சியான வருகைக்கும் கூடிய வீதப்பங்காளர்களாக இருக் கின்றீர்கள். இதன் முக்கியம் கருதி, இதுவரை சந்தா செலுத்தாதோர் செலுத்தியும், புதிய சந்தாதாரரை அறிமுகம் செய்தும், ஆக்கங்களை அனுப்பி வைத்தும் உதவும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

-சஞ்சீவி.

தபாற் கட்டளை கணக்கிலக்கம்:
POST GIRO NO:
3 65 35 28.

வங்கி இலக்கம்:
VESTJYSK BANK
A/C. NO: 7601-408876-9
CHANCHIVE
7500 HOLSTEBRO.

# டென்மார்க்கில் வாழும் வயோதிப அகதிகளின் பிரச்சனைகள்.....

-செல்வன்.

## வயோதிபம்:

வாழ்க்கை என்ற புத்தகத்தின் இறுதி அத்தியாயமே வயோதிபம் என்று அர்த்தம் கொள்ளப்படுகின்றது. மனிதர்கள் வயோதிபப் பருவத்தை அடையும் போது பெரும்பாலும் தன் சுயாதீனத்தை இழந்து பிறரைச் சார்ந்திருக்க வேண்டியவர்களாக மாறிவிடுகின்றனர். மனித உடலுடன் சாதாரண ஓர் இயந்திரத்தை ஒப்பீடு செய்வது வழக்கம். எல்லா இயந்திரங்களுமே வரையறுக்கப்பட்ட வாழ்காலத்தைக் கொண்டிருக்கும். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் இயந்திரங்கள் தனது உற்பத்தித் திறனை இழந்து விடுவதுடன் பழமையடைந்தவையாகவும் கருதப்படும். ஆனால் மனிதர்களின் வாழ்கால அளவுகள் எப்போதும் ஒத்திருப்பதில்லை. காரணம் உயிரியல் ரீதியான மாற்றங்கள் மனிதருக்கு மனிதர் வேறுபட்டதாகவே அமைகின்றன. எல்லாவற்றையும் விட மனிதருடைய வயோதிபம் உடல் என்ற பௌதிகக் காரணியினால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக உளவியல் ரீதியான காரணிகளும் மனித வயோதிபத்தில் பெருமளவுக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றன. உதாரணமாக நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களில் பலர் உண்மையான வயோதிபத்தை அடையும் முன்னரே தாம் வயோதிபத்தை அடைந்து விட்டதாக கூறிக்கொள்வதினை அவதானிக்கலாம். ஆனால் வேறு சிலர் உண்மையான வயோதிபத்தை அடைந்த பின்பும் இளமையான உணர்வுகளுடனும் நினைவுகளுடனும் இளைஞர்கள் போலவே வாழ்ந்து வருவதினை நாம் அவதானிக்கலாம்.

மனிதர்கள் எந்த வயதில் வயோதிபர்களாக மாறுகின்றார்கள் என்ற விடயம் தொடர்பாக சமூகத்திற்குச் சமூகம், மனிதருக்கு மனிதர் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றது. நாம் இன்று வாழும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இரண்டு வகையான வயோதிபர்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு வகையான குழுவினரை வாலிப வயோதிபர் என்று பெயரிட்டுக் கொள்ளலாம். இவர்கள் நாட்டின் சட்டதிட்டங்களின் படி வயோதிபர்களாகக் கருதப்பட்டாலும், நடைமுறையில் சுயசார்புத்தன்மையை இழக்காமலும், சமூகத்தில் சுறுசுறுப்பு மிக்க அங்கத்தவர்களாக

கருதப்படுவர். இவர்கள் தம்மை தாம் வயோதிபர்களாக அறவே கருத்திக் கொள்வதில்லை. மற்றைய குழுவினரை முதிய வயோதிபர்கள் என்று பெயரிட்டுக் கொள்ளலாம். இவர்கள் பல விதத்திலும் மற்றையவர்களைச் சார்ந்திருப்பவர்களாக இருப்பர்.

எது எவ்வாறாக இருந்தாலும் பெரும்பாலான மேற்கத்தய நாடு களில் 65 70 வயதிற்கு மேற்பட்டவர்களே வயோதிபர்களாகக் கருதப்படுகின்றனர். ஏனெனில் இந்த வயதுகளே மேற்குறிப்பிட்ட நாடுகளில் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான வயதாகக் கருதப்படுகின்றது. மேலும் பெரும்பாலான ஆசிய நாடுகளில் 50வயதிற்கு மேற்பட்டவர்களையே வயோதிபர்களாகக் கருதிக் கொள்கின்றனர். காரணம் இத்தேசங்களில் வாழும் மக்கள் 50 வயதளவிலேயே பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என்று பாரிய குடும்பப் பொறுப்புக்களை சுமக்க வேண்டிய நிலைக்கு மாறுகின்றனர். இவற்றை விட மேலும் சில மூன்றாம் உலக நாடுகளில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களே வயோதிபர்களாகக் கருதப்படுகின்றனர். காரணம் இந்த நாடுகளில் உள்ள வாழ்க்கை நிபந்தனைகள் மிகவும் கடுமையானதாகவும் வாழ்க்கைத்தரம் மிகக் குறைவானதாகவும் அமைந்து விடுகின்றன. இத்தகைய காரணங்களினாலேயே மக்கள் எந்த வயதில் வயோதிபர்களாக மாறுகின்றனர் என்ற வினாவுக்கு திட்டவட்டமான ஒரு விடையை கூற முடியாதுள்ளது. வயோதிபம் எந்தளவில் ஆரம்பிக்கின்றது என்பதினை தீர்மானிக்கும் போது மக்களுடைய வாழ்க்கைக் காலம், வாழ்க்கைத்தரம் வாழ்க்கை நிபந்தனைகள் வாழ்வு தொடர்பான மக்களது கருத்துக்கள் கலாச்சார சமூகப் பின்னணி போன்ற விடயங்களைக் கருத்திற் கொள்வது அவசியமாகும்.

## டென்மார்க்கில் வாழும் வெளிநாட்டவர்கள்.

இன்று டென்மார்க்கில் வாழும் மக்கள் தொகையில் ஏறக் குறைய 4% ஆனவர்கள் வெளிநாட்டவர்கள் ஆவர். டென்மார்க் நோக்கிய வெளிநாட்டவர்களின் புலம்பெயர்வுக்கு நீண்ட ஒரு வரலாறு இருந்த போதிலும் 1960 களின் இறுதியிலேயே வெளிநாட்டவர்களின் காற்று டென்மார்க் நோக்கி உக்கிரமாக வீசத்தொடங்கியது எனலாம். குறிப்பாக 1960களின் இறுதியிலும் 1970களின் ஆரம்பத்திலும் டென்மார்க்கில் நிலவிய தொழிலாளர் பற்றாக்குறையை பூர்த்தி செய்யும் முகமாக துருக்கி யூக்கோசலாவியா, பாக்கிஸ்த்தான் ஆகிய நாடுகளிலிருந்து பெருந்தொகையான ஆண்கள் "தொழிலாளிகள்" என்ற வகையில் வரவழைக் கப்பட்டனர். 1970களில் இந்த தொழிலாளர்கள் குடும்ப இணைப்புத் திட்டத்தின் பிரகாரம் தமது மனைவி பிள்ளைகளை டென்மார்க்கிற்கு வரவழைக்க ஆரம்பித்தனர். 1973இல் டென்மார்க் ஐரோப்பிய சமூகத்தில் (E.F) அங்கத்தவம் பெற்றதன் பின்னர் புலம்பெயர்ந்தோர், அகதிகள் ஆகியோரின் தொகை படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்தது.

1/1/1996 இன் புள்ளிவிபரங்களின்படி டென்மார்க்கில் வாழும்

வெளிநாட்டவர்களில் கூடிய எண்ணிக்கை கொண்ட பத்து நாட்டவர்களின் விபரங்கள்

| | |
|---|---|
| துருக்கி | 35,879 |
| பழைய யூக்கோசலாவியா | 28,081 |
| பிரித்தானியா | 12,138 |
| நோர்வே | 11,089 |
| ஜேர்மனி | 10,639 |
| சுவீடன் | 9,080 |
| ஈரான் | 7,363 |
| ஈராக் | 7,077 |
| பாக்கிஸ்த்தான் | 6,552 |
| சோமாலியா | 6,992 |
| மற்றைய நாட்டவர்கள் | 88,063 |
| மொத்த வெளிநாட்டவர்கள் | 2,22,746 |

மேற்குறிப்பிட்ட நாடுகளில் பிரித்தானியா, நோர்வே, சுவீடன், ஜேர்மனி போன்ற நாடுகளிலிருந்து இங்கு இடம்பெயர்ந்தவர்கள் டெனிஸ் சமூகத்தில் இணைந்து கொள்வதில் அதிகளவு பிரச்சினைகளை பொதுவாக எதிர்நோக்குவதில்லை. மாறாக ஐரோப்பிய பின்னணிகள் ஏதுமற்ற மாறுபாடான கலாச்சாரப் பழக்க வழக்கங்களைக் கொண்ட சமூகங்களிலிருந்து புலம்பெயர்ந்த மக்களுக்கே டெனிஸ் சமூகத்துடன் இணைந்து கொள்வதில் பலதரப்பட்ட பிரச்சினைகள் எழுகின்றது. இக்கட்டுரை அச்சமூகங்களிலிருந்து டென்மார்க்கிற்கு புலம்பெயர்ந்திருக்கும் வயோதிபர்களையும் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையுமே அதிக அளவில் கருத்திற் கொண்டிருக்கின்றது.

## *வயோதிப அகதிகளின் பிரச்சினை.*

பொதுவாகவே அகதியாக்கப்படுவது என்பது துன்பகரமானது. அதிலும் குறிப்பாக வயோதிப வயதில் அகதியாக்கப்படுவதும் உயிர் பிழைப்பதற்காக அந்நிய தேசம் ஒன்றிற்குப் புலம் பெயர்வதும் மாறுபாடன கலாச்சாரச் சமூக அமைப்பு ஒன்றில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தை எதிர்நோக்குவதும், துன்பம் என்பதனை விட இன்னும் அதிகமானது. இன்று டென்மார்க்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் புலம்பெயர்ந்தவர்களின் பெரும்பகுதியினர் அதிகார தோரணையான ஒரு சமூக அமைப்பில் இருந்து வந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இங்கு அதிகார தோரணையான சமூக அமைப்பு என்னும் போது ஜனநாயக உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு

சமூக அமைப்பையே கருதுவதாகும். இங்கு தனிப்பட்ட ஒரு சிலரே அல்லது ஒரு குழுவோ தான் சமூகம் தொடர்பான அதிகாரங்களை அதிகளவில் வைத்திருப்பர். மேலும் இங்கு வயோதிபர்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாகக் கருதப்படுவர். அத்துடன் அவர்களுடைய நீண்ட கால வாழ்க்கை அனுபவங்களை முன்னிட்டு அவர்களது ஆலோசனைகளுக்கு அமையவே மற்றவர்கள் நடந்து கொள்வர். பல சமயங்களில் இந்த வயோதிபர்களே தமது குடும்பங்களையும் சமூகத்தினையும் வழிநடாத்துகின்றனர். இந்த வகையான சமூகங்களில் கணவன் மனைவிக் கிடையில் பிசைச்சினைகள் ஏற்படும் போது கூட அவர்களுக்கருகாமையில் வாழும் வயோதிபர்கள் தன்னிச்சையாக முன் வந்து பிரச்சினைகளை தீர்த்து வைக்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட வகையில் இந்தப் புலம்பெயர்ந்த வயோதிபர் கள் தமது சொந்த சமூகத்தில் மிகவும் முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளனர். ஆனால் இந்தப் புலம்பெயர்ந்ததின் பிறகு அவர்கள் பழைய முக்கியத்துவத்தைப் பெரும்பாலும் இழக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டிருப்பர். அவர்களுடைய நீண்டகால வாழ்க்கை அனுபவங்கள் ஏறக்குறைய செல்லாக்காசாக மாறிவிடும். அவர்களோ அவர்களது ஆலோசனைகளோ இங்கு எவர்க்கும் தேவைப்பட மாட்டாது. மறுபுறம் இந்த வயோதிபர்கள் பலவகையிலும் மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையை எதிர்நோக்கியிருப்பர்.

புதிதான சூழல், புதிதான சமூகம், புரியாத மொழி என்பன இந்த அப்பாவி வயோதிபர்களை சமூகத்திலிருந்து மட்டுமல்ல சொந்தக் குடும்பங்களிலிருந்தே அந்நியப்படுத்தி தனிமை என்ற சிறைக்குள் சிக்க வைத்து விடுகின்றது.

டென்மார்க்கில் வாழும் வெளிநாட்டு இளைஞர்களது பிரச்சினை களுடன் ஒப்பிடும் போது இங்கு வாழும் வயோதிபர்களது பிரச்சினைகளின் கனம் சிறிதும் குறைந்ததல்ல. ஆனால் டெனிஸ் அரசாங்கமும் தொலை தொடர்பு சாதனங்களும் இளைஞர்களது பிரச்சசைகளில் கவனம் செலுத்துவதைப் போல் வயோதிபர்களது பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதில்லை. ஒரு வேளை இந்த வயோதிப அகதிகளில் பெரும்பாலானவர்கள் டெனிஸ் மொழியில் வலுவற்றவர்களாக இருப்பதும் தமது பிரச்சினைகளை தம் அடிமனதுக்குள்ளேயே மூடிமறைத்து வைத்துக் கொண்டு அமைதியாகவும், மௌனமாவும் நாட்களை நகர்த்திக் கொண் டிருப்பதும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

எவ்வாறு இருந்தாலும் இங்கு வாழும் வயோதிப அகதிகளின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் வளர்ந்து செல்வதாகவே அமைகின்றது. எண்ணிலடங்கா அந்தப் பிரச்சினைகளில் பொதுமையானதும் முக்கியது மான சில பிரச்சினைகளை நாம் இங்கு எடுத்து நோக்கலாம்.

## சுயசார்புத் தன்மையை இழத்தலும் சார்பு நிலைக்கு மாறுதலும்:

இன்று இங்கு வாழ்ந்து வரும் வயோதிப அகதிகளில் பெரும் பாலானவர்கள் அதிகார தோரணையானதும், மரபு ரீதியான சிந்தனைகளில் ஊறிப்போனதுமான சமுதாய அமைப்புக்களிலிருந்து வந்தவர்களாவர். அத்துடன் இவர்கள் மரபுவழி வந்த கட்டுப்பாடான கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைக்கு படிக்கப்பட்டவர்களாகவும் இருப்பர். இந்தச் சமூக அமைப்பில் பல சமயங்களில் மரணம் ஒன்றுதான் பெற்றோர்களையும் பிள்ளைகளையும் பிரிப்பதாக இருக்கின்றது. இங்குள்ள வயோதிபர்கள் தமது இறுதி நாள் வரை குடும்பத்தைப் பராமரிப்பவர்கள். குடும்பம் தொடர்பான இறுதி முடிவுகளை எடுப்பவர்கள் என்ற வகையில் குடும்பத்தில் மிகவும் கௌரவமான பங்கினை வகித்திருப்பர்.

ஆனால் இவர்கள் டென்மார்க்கிற்கு வந்ததன் பின் அவர்களது நிலை பெரும்பாலும் தலைகீழாக மாறிப்போயிருக்கும். குறிப்பாகப் பெற்றோர்கள் சொந்த நாட்டிலும், பிள்ளைகள் டென்மார்க்கிலும் என்று பிரிந்து வாழ்ந்து வந்த காலப்பகுதிக்குள் பிள்ளைகள் மரபுவழிச் சிந்தனை களிலிருந்து விடுபட்டு டெனிஸ் சமூகத்தின் வாழ்க்கை முறைகளை பிள்ளைகள் தத்தெடுத்துக் கொண்டிருக்கலாம். இப்போக்கு பெற்றோர்களின் பழைய பாணியிலான குடும்பத் தலைமையினை நிட்சயம் அனுமதிக்காது. ஆகவே நிறையக் கற்பனைகளுடன் சொந்த நாட்டிலிருந்து டென்மார்க்கிற்கு வந்த பெற்றோர்களுக்கு இம்மாற்றங்கள் நிட்சயம் ஏமாற்றங்களைத் தருவதாகவே இருக்கும்.

இதனை விட இந்தக் குடும்பத்தைப் பராமரிப்பவர் என்ற பழைய பாரத்தையும் குறிப்பாக ஆண் வயோதிபர்கள் இழக்க வேண்டியிருக்கும். இங்கு பிள்ளைகளும் பெண்களும் சொந்தமாக வருமானங்களை பெறக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. சுருங்கக் கூறின் இந்த வயோதிபர்களது தேவைகளோ அல்லது நீண்ட கால அனுபவங்களோ அவர்களது பிள்ளைகள் மருமக்களுக்கு அறவே இங்கு தேவைப் படமாட்டாது. மாறாகப் பெற்றோர்கள் பல வகைகளிலும் பிள்ளைகளையும் மருமக்களையும் சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

## மொழியியல் ரீதியான வலுவிழப்பும் தொடர்பு கொள்ளலும்:

இங்குள்ள வயோதிப அகிகளில் பெரும்பாலானவர்கள் மாறு பாடான கலாச்சாரப் பின்னணிகளுடன் கூடிய சமூகங்களிலிருந்து வந்தவர்களாவர். அத்தகைய சமூகங்களில் வயோதிப காலங்களில்

பாடசாலைக்குச் செல்வது என்பதும் ஒரு புதிய மொழியை கற்பது என்பதும் ஒரு கற்பனைக்கு அப்பாற்பட்ட விடயமாகவே கருதப்படும். இந்த வகையில் பெரும்பாலான வயோதிப அகதிகள் மொழியியல் ரீதியாக வலுவற்ற நிலையிலேயே காணப்படுகின்றார்கள். இவற்றைத் தவிர வயோதிப அகதி களில் கணிசமான தொகையினர் மிகவும் குறைந்தளவு கல்வி அறிவினைக் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். இவர்களுக்கு வயோதிப காலத்தில் டெனிஸ் மொழியினைக் கற்றுக் கொள்வது என்பது மிகவும் சிரமமா கவேயுள்ளது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்களின் சமூக கலாச்சாரங்களின் படி பெரும்பாலான பெண் வயோதிபர்கள் வீட்டுத் தாய்மார்களாகவே டென்மார்க்கிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் டெனிஸ் மொழி தொடர்பான அறிவு பூச்சியமானதாகவோ அல்லது மிகவும் குறைந்த நிலையிலோ தான் காணப்படுகின்றது.

மேலும் குடும்ப இணைப்புத்திட்டத்தின் படி டென்மார்க்கிற்கு வந்த வயோதிப அகதிகள் மொழிப்பாடசாலைக்குப் போக வேண்டிய கட்டாயம் இல்லாத காரணத்தால் பல வயோதிபர்கள் டெனிஸ் மொழி கற்கும் வாய்ப்புக்களை தவறவிட்டிருக்கின்றார்கள். டெனிஸ் மொழி பேசத் தெரியாமல் இருப்பது என்பது இந்த வயோதிபர்களை டெனிஸ் சமூகத்திலிருந்து மட்டும் அந்நியப்படுத்தவில்லை. சில சமயங்களில் டெனிஸ் மொழியிலேயே பேசவிரும்புகின்ற அவர்களது பேரக்குழந்தை களிடமிருந்தும் அந்நியப்படுத்திவிடுகின்றது,

## ***தனிமை:***

இங்குள்ள பெரும்பாலான அகதிகள் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைகளில் ஊறிப்போன சமூகங்களிலிருந்து வந்தவர்கள் என்று ஏற்கனவே பார்த்தோம். இவர்களது சமூகங்களில் விருந்தோம்பல் நெருக்கமான சமூகத் தொடர்புகளைப்பேணல் என்பன முக்கியமான அம்சங்களாக அமைகின்றது. இத்தகைய சமூகங்களில் விரும்பிய நண்பர்களின் இல்லத்திற்கு முன்னறிவித்தல் கொடுக்காமலேயே சென்று சந்திப்பதும் சமவயதுடன் கூடிய நண்பர்களிடம் தங்கள் அந்தரங்கப் பிரச்சினைகளை கூறி ஆறுவதும் இச்சமூக அங்கத்தவர்களின் சாதாரண பண்புகள் ஆகும். ஆனால் இந்த வயோதிபர்கள் டென்மார்க்கிற்கு வந்ததன் பின் இத்தகைய இனிமையான வாய்ப்புக்களை இழந்து மிகவும் தனிமையான வாழ்வினையே வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் என்று எல்லோரும் வேலைத்தளத்துக்கும் பாடசாலைக்கும் சென்றுவிட நாளின்

பெரும்பகுதியை இந்த வயோதிபர்கள் தனிமையிலேயே கழிக்கின்றனர். குறிப்பாக வயோதிபப் பெண்கள் பெரும்பாலான நேரத்தை வீட்டிலேயே கழிகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கட்கு சமவயது நண்பர்கள் இல்லை என்றே கூறலாம். ஒரு ஈரானியப் பெண்மணி கருத்துக் கூறுகையில் "எல்லா விடயங்களையும் வயதில் இளையவர்களுடன் நாம் கதைத்துப் பரிமாறிக் கொள்ள முடியாது வயதால் வேறுபட்டவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது என்பது இலகுவாக இருப்பதில்லை." என்கின்றார்.

வயோதிப ஆண் அகதிகட்கு என நிட்சயமாக பல பொழுது போக்குக் கழகங்கள், ஸ்தாபனங்கள் அல்லது இடங்கள் இருக்கத் தான்செய்கின்றது. ஆனால் பெண் வயோதிபர்களுக்கென்று பொழுது போக்கு வசதிகளோ ஒன்று கூடலுக்கான வாய்ப்புக்களோ அறவே இல்லை என்றே கூறவேண்டும். பெரும்பாலும் பெண் வயோதிபர்களின் பொழுது போக்கு ஸ்தலம் அவர்கள் வாழும் இல்லமாகவும் அவர்களுடைய தொடர்பாளர்கள் குடும்ப அங்கத்தவர்களாகவுமே அமைந்திருக்கின்றது.

இவற்றைவிட டென்மார்க்கின் காலநிலைகளும் இந்த வயோதி பர்களின் தனிமைப்படுத்தப்பட்ட வாழ்விற்கு வழி வகுத்து விடுகின்றது. குறிப்பாக வசந்த காலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் குளிருக்குப் பயந்து இவர்கள் வீட்டை விட்டு வெளியே வரத்துணிவதே இல்லை.

இந்த வயோதிபக் கூட்டத்தில் சற்று வயது குறைந்தவர்கள் தாம் சமூக ரீதியில் தனிமைப்பட்டிருப்பதாகவும் தமது வாழ்வு அர்த்தமற்று விரயமாகிக் கொண்டிருப்பதாகவும் உணர்கின்றார்கள். வாழ்க்கை முழுவதும் சுறுசுறுப்பாய் உழைத்துக் கொண்டிருந்த இந்த மனிதர்களுக்கு டென்மார்க்கில் நிகழும் வேலையில்லா நிகழ்வுகளும் நேரத்தை எதையுமே செய்யாமல் விரையமாக்கும் முறைகளும் பழக்கப்படுத்திக் கொள்ள முடியாத விடயங்களாக அமைகின்றன. ஒரு வயோதிப அகதி பின்வருமாறு கூறுகின்றார். "எனக்கு இப்போது 54 வயது தான். என்னைப் பொறுத்தவரை என் வாழ்வில் இனி எதுவும் இல்லை, மரணத்துக்காக காத்திருப்பதைத் தவிர."

வயோதிபக் கட்டத்தில் இறுதி நிலையில் இருக்கின்ற அகதி களும் பல வகையில் தனிமை என்ற சிறைக்குள் சிக்கியிருந்தாலும் அவர்கள் இந்த வேலையில்லாத சூழ்நிலைகளை ஓரளவுக்கு ஏற்றக் கூடியதாக உள்ளது. அவர்களது ஏக்கங்கள் பெரும்பாலும் மற்றைய சம வயது நண்பர்களை சந்திப்பது தொடர்பாகவோ அல்லது தமது இறுதி நாட்கள் பற்றியதாகவோ அல்லது தங்கள் சொந்தத் தேசத்தில் தாங்கள் வாழ்ந்த வாழ்வு, வாழ்ந்து வந்த இடங்கள் தொடர்பாகவோ அல்லது வேறு நாடுகளில் வாழுகின்ற தமது மற்றப் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் தொடர்பாகவோ தான் இடம்பெறுகின்றது.

## வயோதிபர்களின் பராமரிப்பு:

டென்மார்க்கில் வாழுகின்ற இந்த வயோதி அகதிகளின் இறுதி நாட்கள் எவ்வாறு அமையப் போகின்றது என்று எதிர்கூறுவது இலகுவான காரியமல்ல. இன்றுள்ள நிலமையில் வயோதிப அகதிகளுக் கான பராமரிப்புத் தேவைகள் அதிக பிரச்சினைக்குரியதாக இல்லாத போதும் இன்னும் சில வருடங்களில் இத்தேவைகள் பிரச்சினைகட்குரியதாக மாறப் போவது என்னவோ நிட்சயமான ஒரு விடயமாகும்.

தாம் தம்மைப் பராமரித்துக் கொள்ள இயலாமல் போகின்ற காலங்களில் வயோதிபர் இல்லங்களுக்கு செல்ல வேண்டி வரலாம் என்ற நினைவே இங்குள்ள பல வயோதிபர்கட்கு ஜீரணிக்க முடியாத ஒரு விடயமாக இருக்கின்றது. ஆனால் மூத்த தலைமுறையினர்கள் தாம் தமது பெற்றோரை சாகும் வரை வைத்து பராமரித்தது போல எதிர்காலத்தில் தமது பிள்ளைகளும் தம்மை வைத்துப் பராமரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமல்ல. இந்த மரபுவழிச் சிந்தனைகள் இன்றுள்ள நவீன டெனிஸ் சமூகத்தில் நீண்ட காலத்தில் கைவிடப்பட்டு விடலாம். அகதிகள் சமூகத்தின் இரண்டாம் தலைமுறையினர் பெரும்பாலும் டெனிஸ் சமூகத்தின் வாழ்க்கை முறைகளையும் பழக்கவழக்கங்களையுமே பின்பற்றி வருகின்றனர். இங்கு பெற்றோர்கள் பிள்ளைகளுடன் வாழ்வதற்கு பெரும்பாலும் பிள்ளைகளின் வீட்டில் இடவசதி இருக்காது. அவ்வாறு இடவசதி இருந்தால் கூட சில சமயங்களில் அவர்களின் மனம் இடம் கொடுக்க மாட்டாது.

எவ்வாறு இருந்தாலும் இன்றைய அகதிகளின் பெரும்பாலான வர்கள் தமது பெற்றோரை வைத்துப் பராமரிக்க தயாராக உள்ளார்கள் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. ஆனால் கணவனும் மனை வியும் பிள்ளைகளும் வேலை படிப்பு என்று அன்றாடம் நேரத்திற்குப் போராடிக் கொண்டிருக்கும் பொழுதுகளில் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருக்கும் வயோதிப பெற்றோர்களை வைத்துப் பராமரிப்பது என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகப் போய் விடலாம். அந்தச் சூழ்நிலைகளில் பெற்றோர்களை வயோதிபர் இல்லங்களுக்கு அனுப்புவதனைத் தவிர மாற்று வழி ஒன்றைக் கண்டுபிடிப்பது எந்தளவிற்கு சாத்தியமென்று வரையறுத்துக் கூறமுடியாது.

இத்தகைய நிர்ப்பந்தமான நிலையில் வயோதிபர்கள் வயோதிபர் இல்லங்களிற்கு அனுப்பப்பட்டால் கூட தாம் தமது கடமைகளிலிருந்து தவறிவிட்டதாக பிள்ளைகளுக்கும் தமக்குச் செய்ய வேண்டிய கடமைகளை தமது பிள்ளைகள் செய்யாமல் தவிக்க விட்டதாக பெற்றோருக்கும் உளவியல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இது குடும்ப அமைதியையே சில வேளைகளில் நாசமாக்கி விடலாம்.

உதாரணமாக மரபு வழிச் சிந்தனைகளில் ஊறிப்போன சமூகங்களிலிருந்து வந்த ஒரு தமிழ் வயோதிப பெண்மணிக்கோ அல்லது துருக்கிப் பெண்மணிக்கோ வயோதிபர் இல்லங்களுக்கு அனுப்பப்படுவது என்பது நிட்சயம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கருத்தாக இருக்கமாட்டாது. குறிப்பாக டெனிஸ் மொழி பேசத் தெரியாத நிலையில் இவர்கள் ஒரு டெனிஸ் வயோதிபர் இல்லத்திற்கு அனுப்பப்பட்டால் தவிர்க்க முடியாத அவர்கள் வாழ்வு தனிமை மயப்பட்டதாக மாறிவிடும். அதுமட்டுமல்ல இவர்களின் சொந்த மொழி பேசத் தெரியாத கலாச்சாரப் பண்பாடு பற்றிய அறிவற்ற பராமரிப்பு ஊழியர்கட்கும் இவர்களைப் பராமரிப்பது என்பது இலகுவானதாக இருக்கமாட்டாது. இதனாலேயே வயோதிப பராமரிப்பு தொடர்பான கல்வித் துறைகளில் இன்று டென்மார்க்கில் வாழும் வெளிநாட்டவர்கள் ஆர்வம் செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று இப்போதெல்லாம் அறிவுறுத்தப்படுகின்றது.

சுருங்கக் கூறின் இனவாரியான வயோதிபர் பராமரிப்பு நிலையங்களுக்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. அங்கு இந்த வயோதிப அகதிகள் தமது சொந்த மொழியில் தொடர்பு கொள்ளக் கூடியதாகவும் அமைதியான முறையில் தமது இறுதி நாட்களை கழிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அது மட்டுமன்றி பராமரிப்பு இல்லங்களில் பணியாற்றுபவர்கள் இந்த வயோதிபர்களின் சமூக கலாச்சார அடிப்படையிலான சிந்தனைகளை புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

---

# பின்புலம் .....!

இது புதிய மாறுதல்களை
உட் கொண்ட சமூக வாழ்வாகலாம்
முந்தியதை விடவும்....
இன்றுவரை!

இந்தச் சமூக வாழ்வின்மீது
இனியும்....

புதிய மாறுதல்கள் படிமமாகின், ஆகும்.
அக்கணம் எங்களின் இந்தப்
புதுமையான சமூக வாழ்வு
மிகவும் பழமையானதாய்....

நெடு மரம்மீது
தடம் கோர்த்து வளர்ந்தும்
வளாத்து வைத்தும் கூட
இரு நரம்பில்
தொங்கி ஆடும்
காவோலை போல் சில காலம்
காட்சிக்காய் இவை
தொங்கும்.

தொங்கியும் வாழும்
சிலகாலம்.

- லோகநாதன். செ.

---

சிறுகதை..............................................................................................................

# ' அம்மா ' ஒருத்தி இருக்கிறாள்

........................................................ முல்லையூரான்...............

சனிக்கிழமை. ஓய்வு நாள். வேலையில்லாத பொன்னாள்.

வேலை நாட்கள் பொல்லாதவை. அதையே நினைத்து நினைத்து இன்றைய பொன்னான நாளையும் பொல்லாத நாளாக்கிவிடக் கூடாது.

எச்சரிக்கை ஆகிறேன்.

கதவைத்திறந்து கொண்டு வெளியே இறங்குகிறேன்.

பனிபூத்துக் கிடக்கும் காரை ஒருவன் நின்று உரஞ்சிக் கொட்டிக் கொண்டிருக்கிறான்.

காலைக்கடன் கழித்துவிட்டு வரும் நாயை இழுத்துக் கொண்டு ஒரு சிறுமி வீடு விரைகிறாள்.

சிகரட்டை பற்ற வைத்துக் கொள்கிறேன். நடக்கிறேன்.

புதுக்காற்றுச் சுவாசம் பழைய தென்பை எழுப்பிக் கொள்கிறது. அடுக்கு மாடிக் கட்டடங்களை கடந்து நெடுவீதியின் கரையோரமாக நடக்கிறேன்.

எதிர்த்திசையால் வரும் மஞ்சள் நிற பேருந்தை முந்திக் கொண்டு கார் ஒன்று விரைகிறது. இரவுநேரப் பனித்துளிகளோடு மரங்கள் பெருமூச் செறிகின்றனவா? கானோரப் புற்கள் தமது பூக்காலங்களை நினைத்து கொள்கின்றனவா?

எனக்கென்ன...... எதுவுமே நினைக்காமலே சென்று கொண்டிருப்பது தான் சந்தோஷம்.

ஏன் கெட்டவைகளையே நினைக்க வேண்டும். நல்லவைகளை நினைத்து, ரசித்து வாழ்தலே பேரின்பம். நடந்து கொண்டே இருக்கிறேன்.

அவன் எதிரே வருகிறான். தூரத்தே.

இவன் ஒரு குருடன்.

தெரியாத கண்களுக்கே சொந்தக்காரன்.

இவன் பாவமல்லன். பாக்கியசாலி என்பேன். டென்மார்க்கில் இந்த குருடனுக்கு எல்லா வசதிகளும் உண்டு; எனக்குள்ளது போல்.

அவனை நெருங்குகிறேன்.

' கலோ மாடவா ' என்றான் ஊல. ஊல என்பது அவனது பெயர்.

' கண் தெரியாத நீ எப்படி என்னை அடையாளம் கண்டாய்? ' என்று கேட்கிறேன்.

சிரித்துக் கொண்டே.....

' மாடவா! நீ வருமுன்பே உன்னில் மணக்கும் உள்ளி, தூள் வாசனை முன்பே வருகிறதல்லவா? என்று சொல்கிறான்.

எனக்கு சற்று வெட்கமாகப் போய்விடுகிறது. அவன் பிடித்திருந்த கையை விலக்கிக் கொண்டு தொடர்ந்து நடக்கிறேன்.

எனது தந்தை மாதவன் என்று வைத்த அழகிய பெயரை ' மாடவன் ' என்று தான் டெனிஸ் மக்கள் என்னை அழைப்பர்.

சரி அதற்கென்ன. நல்லதையே நினைப்போம். நல்லதையே ரசிப்போம். நலமே வாழ்வோம். குண்டு, இரத்தம், இடிந்த கட்டடங்கள், தமிழ் அகதிகள், என்று ஏன் கெட்ட நினைவுகள்...

எதுவுமே எனக்கு வேண்டாம்.

ஈழத்தை விடவும் டென்மார்க்கில் எத்தனை அழகுகள், அதை அனுபவிக்க வசதிகள் உண்டு.

நல்லவைகளையே நினைப்பேன், ரசிப்பேன். நடந்து கொண்டி

ருக்கிற எனது மனது இப்படி நினைத்துக் கொள்கிறது.

அவைகள் எல்லாம் ஒரு காலம்.

மனிதமலத்தை நினைத்துக் கொண்டே சோறு உண்பவன் போல... இந்த தமிழர்கள். வாழத் தெரியாதவர்கள். காசு, சீட்டு, வட்டி, கார், செக் என்று வலைப்பட்டுக் கொண்டவர்கள் பாவங்கள். பரிதாபத்துக்குரியவர்கள்.

அரைவாசி எரிந்து முடிந்த சிகரட்டை எறிகிறேன். கால் அதை மிதித்துவிட்டு நடக்கிறது. வலது புறம் விரிந்து கிடக்கும் வயல் வெளிகள். அதைக் கடந்து தெரியும் பாடசாலைக் கட்டடம். இடது புறம் இருக்கும் வயோதிபர் மடம், எல்லாவற்றையும் கடந்து நடந்து கொண்டிருக்கிறேன்.

எதிர்ப்படுகிறது யேசுவின் தேவாலயம். ஆள் நடமாட்டம் குறைந்த ஆலயம் அது, ஆட்கள் அதிகம் வருவதில்லை என்று தேவாலயத்தை மூடிவிடவோ இடித்துவிடவோ இல்லை. என்றோ ஒருநாள் இந்த மாயையிலிருந்து விலகி மீண்டும் தேவனை நாடி வருவார்கள் என்ற நம்பிக்கையோடு தேவாலயம் நிமிர்ந்து நிற்கிறது.

தேவாலயம் மாயையா ! அல்லது தேவாலயத்துக்கு வெளியே உள்ளது மாயையா ?

மாயை என்று ஒன்றுமே இல்லை. எல்லாமே உண்மையானவை. சிகரட், மது, அழகிய மங்கையர், எல்லாமே உண்மையானவை. அனுபவிப்பதற்குரியவை.

மனைவி, பிள்ளை, குடும்பம், என்பன பொய்யானவை.

"வீடு" உறங்குவதற்கு மட்டுமானது. ஆனால் அதை வாழ்வதற்கான இடமென்கின்றனர்.

இது தான் சுத்துமாத்து. வெளியே தான் வாழ்வு. வாழ்வு வெளிபோன்றது.

நான் எப்போதும் போல சந்தோஷமாக இருக்கிறேன்.

தேவாலயத்தை அண்டிக் கிடக்கும் சுடலை. அது நினைவுக் கற்களால் நிறைந்து கிடக்கிறது.

பொய். நினைவு என்பது பொய்.

ஏன் நினைக்க வேண்டும். உறவுகள் - ஏன் இவைகள்? ஒவ்வொன்றும் தனித்தனியானவை. இன்றிருக்கும் நான் இறந்து போனால் மட்டுமே நான் அழுவேன்.

சுடலையை அருகிக் கிடக்கும் வீடுகளைத் தாண்டி செல்கிறேன். முன்னே பாண் வாசனையோடு பேக்கறி எதிர்ப்படுகிறது. இடது பக்கம் வளைந்து, தரித்து - கார்கள் இடித்துக் கொள்ளாதபடி நிதானித்து, பார்த்து நேரே நடந்து செல்லவும்- எதையோ நினைத்து முக்கிவிட்டு புகையிரதம் வந்து நிற்கிறது. காலை இளம் வெயிலில் சனங்கள் இறங்கவும் ஏறவும்

புகையிரதம் போகிறது.
இறங்கியவர்களில் ஒருவன் கென்றிக். எனக்குப் பழக்கமானவன். நல்லவன். முதுகில் நிறைந்த சுமைகளோடு என்னை நோக்கி நடந்து வருகிறான். கை குலுக்கிக் கொள்கிறோம். சுகம் விசாரிக்கிறோம். அவனது தோற்றம்: எங்கோ தூரப் பயணத்தால் வருவது போல இருக்கவே;

' எங்கிருந்து வருகிறாய்? ' என்று கேட்கிறேன்.

' தூர இடத்தில் வசிக்கும் தான் பிறந்த இடமானதும், தனது அம்மம்மா வசித்து வரும் இடத்துக்கு சென்று வருவதாகச் சொல்கிறான்.

சரி என்று தலையாட்டியபடி இருவரும் தொடர்ந்து நடக்கிறோம். கென்றிக் அழவிட முடியாத மகிழ்ச்சியாக இருந்தான். தனது இளம் பராயத்தில் விளையாடிய இடங்கள், படித்த பாடசாலை, தெரிந்த நண்பர்கள்..... என்று எல்லாவற்றையுமே சொல்லிச் சொல்லி மகிழ்கிறான்.
ஆனால்;
தான் பிறந்து வளர்ந்த வீடு இடிக்கப்பட்டு, அந்த இடத்தில் ஒரு பெரிய தொழிற்சாலை கட்டப்பட்டிருப்பதும், அவனது அம்மம்மா, வயோதிப மடத்தில் வசித்து வருவதும் தனக்குக் கவலை தருவதாக சொல்லிச் சொல்லி நடந்து......

சந்தியில் வரும் இறச்சிக்கடையையும் தாண்டிச் செல்கையில் 'அம்மா' என்று ஒரு மாடு அகோரமாகக் கத்தியபடியே சாகும் ஒலியை கேட்ட படி நடந்து கொண்டிருக்கின்றோம். அடுத்து கிடக்கும் கடைக்குள் நான் போக வேண்டும். கென்றிக்கிடம் விடை பெற்றுக் கொண்டு கடைக்குள் நுழைகிறேன்.

அவன் தான்.

என்னைக் கண்டதும், 'நரகத்தமிழா' என விழித்துக் காறி உமிழும் அந்த அவன் தான் நிற்கிறான்.
மனம் இடித்துக் கொள்கிறது. வாங்க வந்த சாமானையும் வாங்க மனமின்றி வெளியேறுகிறேன்.

' நரகத்தமிழா ! என்றே பேசுவான். '

அப்போதெல்லாம் எனக்குக் கோபம் வரும். ஆனால் அவன் ஒரு அறிவிலி. அவனது கூற்றுப்படி தமிழன் நரகம் தான். ஆனால் தமிழனை நரகத்துக்கு ஒப்பிட்டு ஏன் நரகத்தை கீழ்மைப்படுத்துகிறான் என்பது எனக்குப் புரியவில்லை.

அவன் என்னை நன்கு அறிந்தவனல்ல. என்னைத் தெரிந்திருந்தால், அவன் இப்படி என்னை தமிழனோடு சேர்த்துப் பேசியிருக்க மாட்டான்.

சரி. அவனையும் மன்னிப்போம்.

அதைவிடவும் அவன் 'நரகத்தமிழா ! என என்னைப் பேசுவதை

யிட்டு எனக்கொன்றும் கவலையும் இல்லை. ஏனெனில், நான் உள்ளத்தால் தமிழனே அல்ல. நான் ஒரு மனிதன். அவ்வளவு தான்.

'மனிதன்' சொல்லிப் பார்க்க அழகிய பெயர். ஆனால் அவனது செயல்களை நினைத்துப் பார்க்க அது கொடுமை.

இந்த நினைவுகளுக்குள்ளால் சிக்குப்பட்டுச் சிக்குப்பட்டு பல வளைவு-களையும் தாண்டித் தாண்டி வீடு நோக்கி நடந்து கொண்டிருக்கிறேன்.

இந்த உலகம் அழகானது. இயற்கை வலுவானது. இந்த அழகுக்குள் வாழ முடியாதபடி மனிதருக்குள் பேதங்கள் தலைவிரித்துள்ளன.
போர்கள் நடைபெறுகின்றன.
இனம், மொழி, மதம், நிறம், நாடு என்ற பேதங்களால் போர்கள் விரிவுபடுத் தப்படுகின்றன.
இவைகளை நான் வெறுக்கிறேன்.
இந்த டென்மார்க்கின் ஒவ்வொரு வீதியிலும் நிறைந்துள்ள சுதந்திரத்தைப் போல இலங்கையிலும் ஏன் அது இல்லாமல் போயிற்று.
எல்லாமே யுத்தம் தான்.
நல்ல வேளையாக நான் அதிலிருந்து தப்பித்துக் கொண்டேன்.
தலைக்கு மேலால் ஒரு குருவி 'விர்' என்று கடந்து போகிறது.
மழைத் தூறல்கள் விழ ஆரம்பிக்கின்றன.
நடையை உசார்ப்படுத்துகிறேன்.
இரையாமல் பெய்யும் இந்த புதுமழையில் நனைவதே ஒரு இன்பம். இலங்கையில் வெயிலில் கறுத்துப் போன எனது மேனி இந்த மழையில் நனையட்டுமே.
சந்தோஷமாக நடக்கிறேன்.
நினைவுகள் ஓரிடத்தில் குந்தியிருப்பதில்லை. அது மாறிக் கொள்கிறது.
'கடிதம்' ஏதும் வந்திருக்குமோ என்ற எண்ணம் இப்போது. என்ன... 'அன்புடையீர்' என்று ஆரம்பித்து வங்கி இலக்கத்துடன், சாவு, இழப்பு, அழுகை என்று எழுதுங்கள். சனியங்கள் என எனது மனம் திட்டிக் கொள்கிறது.
மனைவி எழும்பியிருப்பாள். சூடான தேனீர் நினைவுக்கு வருகிறது.
எனது வீட்டு அழைப்பு மணியை அமத்துகிறேன். கதவு திறந்து கொள்கிறது. உள்ளே நுழைகிறேன். மனைவியின் கண்களில் நீர்த் திவலைகள், கண் அருகெங்கும் ஈரம். முகம் வீங்கியிருந்தது.
'என்னப்பா' என்கிறேன்.
'உங்கட அம்மா..... செத்துப் போனாவாம். ரெலிபோன் வந்தது'. சொல்லி விட்டு அப்பால் நகர்கிறாள்.
சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் என்னைப் பார்க்கிறேன். வளர்ந்த தலை முடி தோளில் கிடக்கிறது. சிகரட் குடித்துக் கறுத்துப் போன எனது உதடு கள், சிவந்து கிடந்தன எனது விழிகள். அடர்ந்து கிடக்கிறது மீசை.
சரி.

நெஞ்சு விம்மத் தொடங்கியது.
கண் அழுதது.
கை துடைத்தது.
'அம்மா' என்கிறது வாய். தழுதழுத்தபடி. இப்போது நான் நன்றாக அழுகிறேன்
சந்தோசமாக இல்லை.
நாளைக்கும் தான்.

*" உலகத்தை மறந்து இலங்கையை நினைக்க முடிவதில்லை. "*
*" இலங்கையை மறந்து உலகத்தை நினைக்க முடிவதில்லை. "*
*-மு.தளையசிங்கம்.*

---

# வாழ்க்கைப் போராட்டமும் தற்கொலையும்......

உலக நாடுகளுள் டென்மார்க், யப்பான் போன்ற நாடுகளிலேயே தற்கொலை செய்து கொண்டோரின் எண்ணிக்கை அதிகமானதாய் இருந்ததென இதுநாள்வரை வெளிவந்த பல வகையிலான செய்திகள். புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. விகிதாசார அடிப்படையில் தற்கொலை விகிதத்தில் முதன்மையான இடத்தை வகித்த இந்த நாடுகளையே வியக்க வைத்து. தற்போது தற்கொலை விகிதத்திலும் முந்திக் கொண்டு இலங்கை சாதனை படைத்துள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இப்படி இருக்க, எம் மண்ணைவிட்டும் புலம் பெயர்ந்த தமிழர் மத்தியில் தற்போது இந்தத் தற்கொலை எனும் கொடுமையானது. அதிகரித்து வருவது பற்றி யாவரும் அறிவோம். இது பற்றிய ஒரு கண்ணோட்டத்தினையும், அதற்கான காரணங்களையும் ஓரளவாவது தேடிப் பார்க்க முயல்கின்றோம். இத் தேடலுக்கு உதவியாக 'தற்கொலை அதிகரிப்பை தடுத்து நிறுத்த மார்க்கம் என்ன?' என்ற கட்டுரையிலிருந்தும் தகவல் சேர்த்துள்ளோம். (நன்றி - 28.02.1997 வீரகேசரி)

ஒவ்வொரு மனிதனும் தன்னால் கட்டுப்படுத்த முடியாத, சிந்தனைக்கு மிஞ்சிய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக தற்கொலையினை நாடியிருந்தால், உலகில் மனித இனம் என்ற ஒன்று எத்தனையோ ஆயிரம்

வருடங்களுக்கு முன்பே முற்றாக அழிந்திருக்கும். வாழ்வு என்பது பலதரப்பட்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துப் போராடி முன்னேறிச் செல்வதேயாகும். ஆனாலும் ஒரு மனிதனுடைய அன்றாட பிரச்சனைகளுக்கு அவன் சார்ந்த சமூகமே காரணமாக உள்ளது. இவ் வகையிற்தான் நாம் எமது மண்ணினை விட்டு, பலதரப்பட்ட பிரச்சனைகள் மத்தியிலும், பல எதிர்பார்ப்புக்களோடும் புலம் பெயர்ந்து வந்துள்ளோம். முற்றிலும் புதிய சமூக அமைப்புமுறை-இனம், மொழி, காலநிலை, கலாச்சாரம், சட்டவிதிகள், தனி மனித வசதிகள், இயந்திர வேகத்திற்குச் சமாந்தரமான வாழ்வு என்பன போன்ற 'சேம நல - தகவல் பரம்பிய சமூகம்'. எனப்படும் இதனுள் தான் நாம் யாவரும் சிக்கியுள்ளோம் எனலாம். அத்துடன் இங்கு வந்த நாம், எமது வாழ்வின் மீதான திட்டமிடற் பற்றாக்குறையும், அளவுக்கு மீறிய தேவை களை பூர்த்திசெய்ய முற்படும்போதும், மனோவியல் ரீதியாக வாழ்வினை சீர்குலைக்கும் காரணிகளை தாமே உருவாக்கியோ அல்லது உறவு காரணமாக இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்குள் சிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோ, பின் தன்னை தானே வதைக்கும் நிலையான கொடூரத்துள் சிறிது சிறிதாக இணைத்துக் கொண்டும், இறுதியாக தற்கொலை செய்து கொள்கின்றார்கள் எனலாம்.

டென்மார்க்கில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் தொகையில் தற்கொலை என கணிக்கப்படும் மரணங்கள் பற்றிய விகிதாசாரத்தினை தகவற் பற்றாக்குறை காரணமாக இங்கு தரமுடியாதிருந்தும், இலங்கையில் இடம் பெற்ற தற்கொலைகளின் காரணங்களினூடு, சில நடைமுறைப் பிரச்சனைகளை விளங்கிக் கொள்ள முடியும்.

இலங்கையில் 1880 ஆம் ஆண்டு தற்கொலை செய்தோரின் எண்ணிக்கை 10 இலட்சம் பேருக்கு 2 பேராக இருந்த நிலமை, 1970 ஆம் ஆண்டில் 10 இலட்சம் பேருக்கு 29 பேராக அதிகரித்தது. 1995 ஆம் ஆண்டில் மட்டும் ஒரு இலட்சம் பேருக்கு 55 பேர் வீதம் தற்கொலை செய்து கொண்டதாக இலங்கை சமூகவியலாளர்களின் கணிப்பீடு தெரிவித்தது. இந்த வீதம் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கலாம் என சமூகவியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

பெற்றோரின் எச்சரிக்கையை பொறுக்காமை போன்ற அற்ப காரணங்களுக்காகவும் இலங்கையில் தற்கொலைகள் இடம் பெறுகின்றன. தற்கொலை செய்வது ஒரு புறமிருக்க, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் பல்வேறு வகையான தாக்கங்களுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையை விட கிட்டத்தட்ட மூன்று மடங்காக உள்ளது. அதாவது தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களின் நான்கில் ஒரு பகுதியினரே தற்கொலை செய்து கொள்கின்றனர். தற்கொலை முயற்சிகளில் தோல்வியுறுபவர்கள் ஏதோ ஒரு விதத்தில் உடல் அல்லது உளரீதியான

நோயாளிகளாக சமூகத்துக்கு மேலும் ஒரு பிரச்சனையாக எஞ்சுகின்றனர்.

இலங்கையில் இடம்பெறும் தற்கொலைகளில் அதிகமானவற்றுக்கு பிரதான காரணமாக அமைவது காதல் உறவுகள் தொடர்பாக ஏற்படும் மன முறிவுகளாகும். இளைஞர்களதும், யுவதிகளதும் காதல் தொடர்புகள் பெற்றோரின் எதிர்ப்பினால் அல்லது வேறு ஏதோ காரணமாக சிதறுண்டு போவது இளம் காதலர்களின் தற்கொலைக்கு முக்கிய காரணமாக உள்ளது. 1990 ஆம் ஆண்டு தரவுகளின்படி அந்த ஆண்டில் மாத்திரம் காதல் தொடர்பு முறிவுகள் காரணமாக 1093 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

புதிய விவசாய குடியேற்றத் திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்களிலும் தற்கொலைகளின் அதிகரிப்பை காணமுடிகிறது. இக் குடியேற்றங்களின் போது மக்கள் தாம் பழக்கப்பட்ட சமூக சூழல் (SOCIAL ENVIRONMENT) அல்லது சமூக உறவு (SOCIAL RELATIONSHIP) போன்றவற்றில் இருந்து நகர்த்தப் படுவதனால் அவர்கள் தமது இனபந்துக்கள், அயலவர்கள் உட்பட தாம் புரிந்துணர்ந்து கொண்ட சமூக சூழலில் இருந்து இடம் பெயர்வதால் தமக்கு ஏற்கனவே இருந்த பல்வேறுபட்ட குடும்ப, சமூக உறவுகளையும் அவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய உதவி உபகாரங்களையும் இழந்து ஒரு தனித்த நிலைக்கு முகம் கொடுத்து பல்வேறு பரிச்சயமற்ற பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர். இப்பிரச்சினைகளுக்கு மத்தியில் விரக்தி நிலைக்கு உள்ளாகி தற் கொலைக்கு துாண்டப்படுகின்றனர். இதற்கு ஓர் உதாரணமாக மொனரா கலை மாவட்டத்தில் உள்ள தனமல்வில என்ற விவசாய குடியேற்றப் பிரதேசத்தைக் குறிப்பிடலாம். அக்குடியேற்றப் பிரதேசத்தில் 1995 இல் மாத்திரம் ஒரு இலட்சம் பேருக்கு 150 பேர் வீதம் தற்கொலை செய்து கொண்டனர். இலங்கை வரலாற்றில் அதிகம் பேர் தற்கொலை செய்து கொண்ட விவசாய குடியேற்றத் திட்டமாக இக் கிராமம் சாதனை படைத்துள்ளது.

கடவுள் நம்பிக்கை, மத வழிபாட்டு முறைகள் ஆகியவற்றில் இருந்து மனிதர்கள் படிப்படியாக பிரிந்து செல்வது தற்கொலைக்கு அடுத்த முக்கிய காரணமாக கூறப்படுகிறது. இந்தக் கருத்து உலகளாவிய ரீதியில் புகழ் பெற்ற 'எமயில் டகையிம்' என்பவரால் முன் வைக்கப்பட்டது. இவரின் கருத்துப்படி மனிதன் மத நம்பிக்கையிலிருந்து பிரிந்து செல்லும் போது சில பிரச்சனைகளுக்கு உள்ளாகி சமூகத்தில் தனித்தவனாக தானே சில முடிவுகளை தேடிக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகிறான். இந் நிலையில் அவன் தற்கொலை செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்துவிடுகிறான்.

இவற்றைத்தவிர மேலும் பல்வேறு வகையான பொருளாதார பிரச்சனைகளை எதிர்நோக்க முடியாமல் தற்கொலையை தேர்ந்தெடுத்துக் கொள்பவர்களும் உண்டு. இதற்கு ஒரு உதாரணமாக கடந்த சில

ஆண்டுகளுக்கு முன்பு பொலன்னறுவை மாவட்டத்தைச் சேர்ந்த 20 க்கும் மேற்பட்ட விவசாயிகள் தாம் பெற்ற வங்கிக் கடன்களை கொடுக்க வழியின்றி தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. பிரச்சினைகளை ஒழுங்கான முறையில் பகுத்தறிந்து அவற்றிற்குத் தேவையான முடிவுகளை பெறத் தகுதியற்ற மனரீதியான கோளாறுகளும் தற்கொலைக்குக் காரணமாக அமைவதாக சில உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

***நாம் புலம் பெயர்ந்து வாழும் இந்த நாடுகளில், தமிழர்களின் தற்கொலை வீதம் ஏன் அதிகரித்து வருகின்றது? என்பதான கேள்விகளினை சில நண்பர்களிடம் கேட்டிருந்தோம். அவர்கள் தமது கருத்துக்களை இங்கு தருகின்றார்கள். சிரமம் பாராது சஞ்சீவியின் வேண்டுகோளினை ஏற்று தமது கருத்துக்களை அனுப்பி உதவிய அனைத்து நண்பர்களுக்கும் சஞ்சீவி தனது நன்றிகளைத் தெரிவிக் கின்றது.***

## "புலம் பெயர்ந்த தமிழ் இளைஞர்கள் ஏன் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்"

கருத்தாளர்:
- திரு.எம்.எஸ்.கந்தசாமி.

மன அமைதி வேண்டும் என்று சொல்லாதவர்கள் யார்? மனிதர்கள் வாழ்க்கையில் அதைத்தான் தேடி அலைகிறார்கள். வயோதிபர் முதல் இளைஞர்கள் வரை. ஆண், பெண் அனைவருமே அமைதியைத் தேடித்தான் அலைந்த வண்ணம் இருக்கிறார்கள். தற்கொலை செய்து கொண்டவர்களும் மன அமைதியைத் தேடித்தான் தம் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள்.

மன அமைதிக்கு மனோவியல் நிபுணர்கள் நீண்ட காலமாக ஆய்வுகள் செய்து, மன அமைதிக்கு இதுதான் வழியென்று எத்தனையோ சிந்தனைகளை சொல்லியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் பயனுள்ளவைகள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே மன அமைதிக்கு வழி சொல்லுகின்றபோது, மன அமைதியைக் கெடுக்கின்ற விஷயங்களை என்னென்ன என்று ஆராய்ந்து, அவற்றை தவிர்ப்பதற்கான வழி வகை களையும் தெளிவாக எடுத்துக் காட்டியும் உள்ளார்கள். நாம் அவற்றை நன்கு புரிந்து கொண்டு, வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொண்டால் மிக அமைதியும், மகிழ்ச்சியுடனும் நிச்சயம் வாழ முடியும்.

மனம், மனித வாழ்க்கைக்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.

அவரவர் மனோ நிலமைகளை ஒத்தே வாழ்க்கை அமைகிறது. இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெரியார் அவர் யாருமல்ல, திருவள்ளுவர். **"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்"** என்று கூறியிருக்கின்றார். உறுதியான எண்ணங்களுக்கு வலிமையான சக்தி உண்டு என்பது, எண்ணம் உறுதியாக இருந்தால், எதை எண்ணுகிறோமோ அதைச் சாதித்துவிட முடியும் என்பது வள்ளுவரின் வாக்கு. பாரதியாரும், "எண்ணத்தில் உறுதி வேண்டும்" என்று பாடியிருக்கிறார். ஆகவே மன அமைதிக்கு வழி தேடி புறத்தே-வெளியில் அலையத் தேவையில்லை. எம்முடைய அகத்திலே-மனத்திலே அமைதிக்கும் நல் வாழ்வுக்கும் வழிகளைத் தேடவேண்டும்.

மனத்தை மாசு படியாமல் வைத்திருக்க வேண்டும். மாசு என்பது என்ன? உட்பகையாகிய ஆறு குணங்கள் மனித மனத்தில் குடியிருக்கின்றன. அவையாவன: காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாச்சரியம் என்பன. இக் குட்டிப் பிசாசுகளையும், அஞ்ஞானப் பிசாசையும் விரட்டி ஓட்ட முடியுமாயிருந்தால், மனத்தை மாசு படியாமல் வைத்திருக்கலாம். ஒவ்வொருவரும் மன நிம்மதியுடன் வாழலாம்.

எனவே இந்த ஆறு குணங்களையும் நீக்கி ஒருவன் வாழக் கற்றுக் கொண்டால், அமைதியான இன்பம் நிறைந்த வாழ்க்கையினை அவனால் வாழ முடியும். இதைத்தான் நம் மூதாதையர்கள் "மனம் போல் வாழ்வு" என்று சொன்னார்கள். மனிதனுடைய நினைப்புக்குத் தக்கவாறு அவனுடைய வாழ்வு அமைகிறது. மனிதன் எவ்வாறு நினைக்கிறானோ அவ்வாறே ஆகிறான். மனிதன் ஆவதும் அழிவதும் தன்னாலே தான்.

புலம் பெயர்ந்த, எமது இன்றைய இளைஞர்களிடையே மன அமைதி குன்றி; சில சமயங்களில் தன் சக்தி சிதறிப் போவதனாலும், தங்களைத் தாங்களே சமாளிக்க முடியாதவர்களாகி, விரக்தியின் விளிம்புக்குச் சென்று, தற்கொலை செய்து, தன் வாழ்வை முடித்துக் கொள்கின்றார்கள்.

இன்றைய புலம் பெயர்ந்த தமிழ் இளைஞர்களிடையே மன அமைதி குலைவதற்கு அடிப்படைக் காரணங்கள் பல உண்டு; நன்நம்பிக்கை இன்மை, மற்றவர்களுடன் இணங்கிப் போகாமை, தன்னையும் மற்றவர்களையும் புரிந்து கொள்ளாமை, தன்னிடமும் பிற மனிதர்களிடமும் சமுதாயத்திலும் அன்பும் பண்பும் பாராட்டாமை, வாழ்வின் இரு பக்கங்களாகிய இன்பம்-துன்பம் இரண்டிலும் சம நோக்குப் பார்வை இல்லாமை, நட்புக்கு அர்த்தம் புரியாமை, புதிய புதிய ஈடுபாடுகள் இல்லாமை, அமைதி, அன்பு, இரக்கம், ஒழுக்கம், பொறுமை, பயிற்சி விடா முயற்சி, வாழ்கைக்கு திட்டம் இல்லாமை, இலட்சிய நோக்கு இல்லாமை, தன்னிடம் இருக்கும் திறமையைப் பயன்படுத்தாமை, இன்னும் எத்தனையோ. இவைகள் அனைத்தையும் மனதில் நிறுத்தி சரியான பயிற்சி கொடுத்து

வளர்க்காமையினால், வாழ்க்கை என்ற பயணத்தை இடையில் நிறித்துக் கொள்கிறோம். ஆதலால் மனம் துன்பத்தில் நழுவி விழத் தொடங்கும் போது தைரியம்-அறிவு என்ற கடிவாளத்தைப் பிடித்து நிறுத்தி பயிற்சி செய்வதனால், நீதி, சமாதானம், சமத்துவம், அன்பு இவற்றாலேயே இவ்வுலகத்தில் தீராத தைரியமும் அதனாலே தீராத இன்பமும் எய்தலாம். உண்மை நாட்டம், விடாமுயற்சி தன்னைத்தான் செம்மைப் படுத்திக் கொள்வதில் செலவிடும் முயற்சியின் பயனே, மனிதனுக்குச் சந்தோசத்தைத் தரக்கூடியது. விடா முயற்சியும் உறுதியும் உடையவருக்கு எதுவும் முடியாதது அல்ல.

---

# ஏன் தற்கொலை...

கருத்தாளர்:

-திரு.பொன்.மகேஸ்வரன்.

எமது மக்கள் மத்தியிலுள்ள தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு போவதற்கான காரணம் இன்னும் பலர் மத்தியில் புரியாத புதிராகவே உள்ளது. பலரும் தற்கொலை நடந்த பின்னர் இறந்தவரைப் பற்றி தமக்குத் தெரிந்த ஊகங்களையும், இயலுமான அளவு கட்டுக் கதைகளையும் கட்டிவிடுவது சாதாரணமாகவே உள்ளது. என்னைப் பொறுத்தவரையில் இவற்றிற்கான காரணங்களைப் பல வகைகளில் அறியலாம். கூடுதலாக இங்கு வாழ்வோர் “அடைக்கப்பட்ட” ஒரு சூழ்நிலையில் வாழ்வதால், (குளிர், குடும்ப உறவினர் இன்மை, ‘உண்மையான’ சிறுவயதிலிருந்தே பழகிய நண்பர்கள் இன்மை, வீட்டிற்கு வெளியே பொழுது போக்கிற்கான ஏற்பாடுகள் இன்மை.) எமது மூளையில் (மனது) எங்களை அறியாத ஒரு இருட்டுத் தன்மை - மந்தத் தன்மை ஏற்படுகின்றது. இதைவிடவும் வேறு பல காரணிகளும் இருக்கக்கூடும்.

இங்கு வாழும் பலருக்கும் பொருளாதாரப் பிரச்சனைகள் உண்டு. இதனால் ஏற்படும் குடும்ப-மானப் பிரச்சனைகள் கூட காரணமாக இருக்கக்கூடும். இத்துடன் குடும்பகாரர்களாக இருக்கும் போது எமது இளம் வயதுப் பிள்ளைகளினுடனான பிரச்சனைகளை ஒழுங்கான முறையில் தீர்த்து வைக்க முடியாத பெற்றோராகக்கூட இருக்கும். இன்று டென்மார்க்கில் வாழும் பல தமிழ்ப் பெற்றோர்களின் பிரச்சினையே அவர்களின் பிள்ளைகளும், அரச டெனிஷ் சமுதாயத்தின் கெடுபிடிகளும்தான். இன்று பல பெற்றோர், தமது பெற்றோர் என்ற வழமையான (TRADITIONELT) தகுதியினை இழந்து தவிக்கின்றார்கள். நாம் சொல்லும்படி பிள்ளைகள் நடக்கவேண்டும் என்று விரும்புகின்றார்கள். ஆனால் அதற்கேற்றபடி பிள்ளைகள் நடந்து கொள்வதில்லை. இதற்கு ஒருவகையில் பெற்றோரும் காரணமாகும். சமுதாயத்தில் மாத்திரம் பழிபோட முடியாது. இப்படி

பிள்ளைகளை கட்டுப்பாட்டுடன் வளர்க்க முடியாத பெற்றோர், சமுதாயத்தில் தமது அந்தஸ்த்தினை இழந்த நிலையில் (அகதி அந்தஸ்த்து அல்லது டெனிஷ் பிரஜா உரிமை ஒன்றே நிரந்தரம் என்ற நம்பிக்கையில் வாழ்ந்த நிலையில்) இப்படி பிரச்சனைகளை தீர்க்கமுடியாத திண்டாட்டத்தில் தற்கொலை என்பது நடக்கலாம்.

நான் மேற்குறிப்பிட்ட காரணிகள் யாவும் எனது ஊகங்களே தவிர, ஆராய்ச்சிகள் மூலம் ' அறியப்பட்ட உண்மைகள் அல்ல. எமது சமுதாயத்திற்கான முன்னேற்றம் தேவையானால், அலசி ஆராய்வதன் மூலமே ஏற்படுத்த முடியும். அத்துடன் மேலும் எதிர்காலத்தில் எமது மக்கள் மத்தியில் தற்கொலைகளை தடுக்க விரும்பின், இதற்கான காரணிகளை ஆராய்வதுடன், மக்களிற்கு விளக்கமளித்தல் (OPLYSNINGER) புத்திமதி சொல்வதன் மூலமும், தற்கொலை பற்றி சிந்திப்போர், உளவியற் துறை சார்ந்தோருடன் கதைப்பதன் மூலம் தான் நிறுத்த முடியும்.

---

கருத்தாளர்:
- திருமதி: வஸந்தா கமலநாதன்.

இன்றைய நவீன உலகில், எமக்குத் தேவையான அவயவங்களில் பெரும்பாலானவற்றை இயற்கையாகவோ, செயற்கையாகவோ விலை கொடுத்து வாங்கக்கூடியதாக இருக்கின்றது. எமது உயிர் ஒன்றைத்தான் எம்மால் என்றும் விலை கொடுத்து வாங்க முடியாது. அந்த விலை மதிக்க முடியாத உயிரை ஒருவர் இழக்கத் துணிவாராயின் அவர் எவ்வளவிற்குத் தனது வாழ்க்கையின் மீது வெறுப்புள்ளவராக இருப்பார் என்பது தெளிவாகின்றது.

டென்மார்க்கின் கடந்த பத்தாண்டுக்கான புள்ளி விபரத்தை நோக்குமிடத்து, தற்கொலை செய்தவர்களில் பெண்களிலும் பார்க்க ஆண்களின் வீதமே இரண்டு மடங்காக காணப்படுகின்றது. டென்மார்க்கில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களில், கூடுதலாகத் தற்கொலை முயற்சியை ஆண்களே மேற் கொள்கினறனர். தற்கொலை முயற்சியின் முக்கிய காரணங்களாக கீழ் கண்டவற்றைக் கூறலாம்:

1 வரவிற்கு மிஞ்சிய செலவினால் ஏற்பட்ட மீள முடியாத கடனுக்கு ஆளானவர்கள்.
2 பிறந்த வீட்டின் எதிர்பார்ப்பிற்கும், மனைவி பிள்ளைகளின் எதிர்பார்ப்பிற்கும் பொருளாதார ரீதியில் ஈடுகொடுக்க முடியாதுள்ளோர்.
3 திருமணத்திற்கு முன்போ அல்லது பின்போ போதை, பிற பெண்களை நாடல் போன்றவற்றிற்கு அடிமையாகி அதனால் மனைவி,

குழந்தைகள், உறவினர்களின் நன் மதிப்பைப் பெறமுடியாது போனவர்கள்.

4 புலம் பெயர்தலால் தமது தனித்துவத்தை இழந்து, தமது மனைவி, மக்களின் அலட்சியப் போக்கினால் மனமுடைந்து போனவர்கள்.

5 தமது வாழ்க்கையில் தோல்வி, குடும்ப நிலையில் ஏற்படும் மாற்றம் போன்ற கட்டங்களில் சமுதாயத்தின் பிழையான அணுகுமுறைக்கு உட்பட்டவர்கள்.

மேற்கண்ட சந்தர்ப்பங்களில் தற்கொலை முயற்சியை மேற்கொள்பவர்கள் தமது மனக் கவலையினை நம்பிக்கையுடன் பகிர்ந்து கொள்ள நல்ல நண்பர்கள் கிடைக்காத துர்ப்பாக்கியசாலிகளே.

தமிழர்களாகிய நாம் "இப்படித்தான் வாழ வேண்டும்" என்று சிறு வயது முதற் கொண்டே பயிற்றுவிக்கப் பட்டவர்கள். "இப்படிச் செய்யாதே, ஊரார் சிரிப்பார்கள்" என்ற சொற்தொடர் எமது வளர்ப்பு முறையில் தவிர்க்க முடியாத ஒன்றானதாக இடம் பெறுகின்றது.

உற்றார் உறவினர்களை விட்டு அகதிகளாகப் புலம் பெயர்ந்துள்ள நாம் ஒருவருக்கொருவர் ஆறுதலளிப்பவர்களாக இருக்க வேண்டும். நல்ல விசுவாசமான நண்பர்களை எமக்கு தேடிக் கொள்வதுடன், நாமும் விசுவாசமான நண்பர்களாக இருத்தல் வேண்டும். ஒருவர் மனமுடையும் நிகழ்ச்சிகள் நிகழும் போது ஊர் கூடிச் சிரிப்பதை நிறுத்தி அவரிற்கு மன ஆறுதலைத் தருபவர்களாக இருப்பதுடன், அவர் உள நிலை பாதிப்புற்று இருப்பதைத் தெரிந்து கொண்டால், அவருக்கு, ஒரு உளவியலாளரை நாடும்படி அறிவுரை வழங்க வேண்டும். ஒருவர் உளவியலாளரை நாடினால், அவர் நிச்சயமாகச் சித்த சுவாதீனமற்றவராகத்தான் இருப்பார் என்ற தவறான அபிப்பிராயத்தை ஒவ்வொருவரும் முற்றாக மாற்றிக் கொள்ளல் வேண்டும்.

---

உங்களைச் சிந்திக்க வைத்திருக்கும், பல கோணப் பார்வைகளான கருத்துகளினூடும் கூட, தற்கொலைக்கு முயற்சிக்கும் ஒருவரை, முற்றாகத் தடுத்து நிறுத்த முடியாது என்பது, எமது தீர்வான சிந்தனையாக உள்ளது.

ஒருவர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றார் எனில், அவர் சாதாரண பிரச்சினைக்களுக்காக தன்னை வஞ்சிக்க அல்லது அழிக்க முயலமாட்டார். அந்த மனிதரிடம், அவரால் தீர்க்க முடியாத நிறைந்த பிரச்சனைகள் சிறிது சிறிதாக நாளாந்தம் வளர்ந்து அவரது பொறுமையை மிஞ்சும் வகையில் அமைந்திருக்கலாம். அவருக்கு பாரியதான, தன்னைக் கொல்லும் நிலைக்கு, வழிவகுத்த பிரச்சனைகள் இப்படி உருவெடுக்கும் என அவரால் முன்பு தீர்மானித்திருக்கா விடினும், தற்கொலை முயற்சிக்கான ஆரம்பமானது

திடீரென எடுக்கப்படுவது அல்ல எனவும், குறைந்தது 2 இல் இருந்து 3 வருட கால அவகாசத்தின் பின்பே, தற்கொலை என்பது நடைபெறுகிறது என உளவியல் வல்லுனர்கள் ஆய்வின்மூலம் தெரிவிக்கின்றனர்.

இப்படியானோரின் நிலைப்பாட்டினை, ஓர் தனி மனிதனாலோ, எழுத்துக்களாலோ உடனடியாகத் தீர்க்க முடியாது. ஆயினும் இப்படியான சூழ்நிலைக்குள் சிக்கியுள்ளோர், உடனடியாக ஓர் உளவியலாளருடன் கலந்துரையாடுவது மிகச் சிறந்தது. டென்மார்கில் அதிக வீதமுடைய டெனிஷ் மக்கள் தற்கொலை செய்தமை பற்றி யாவரும் அறிவோம். தற்போது அவ்வீதமானது வேகமாகக் குறைந்தும், தற்கொலைக்கு முயற்சி செய்த பலர், சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பி, சந்தோசமாக வாழ்கின்றனர். இதனை உங்களால் நம்ப முடியாமற்கூட இருக்கலாம். ஆனால் முற்றிலும் உண்மை. எப்படி...?

இப் பிரச்சனைக்கான மாற்றுத் தீர்வினைக் கொண்டு வருவதற்காக பெரிதும் முயற்சித்து, அதற்காக ஓர் நிறுவனத்தினை டென்மார்க்கின் பல இடங்களில் அமைத்துள்ளனர். இந் நிறுவனம், தம்முடன் தொடர்பு கொண்டோருக்கு, அவர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களின் பிரச்சனைகளுக்கான மாற்றீட்டினை கொடுத்து, தற்கொலைக்கு முயற்சிப்பவரை, மீண்டும் சாதாரண வாழ்வுக்கு திரும்புவதற்கு உதவி வரு கின்றனர்.

இப்படியான சூழ்நிலைக்குள் சிக்கியுள்ளோர், தமது மனநிலையினை மாற்றி, வாழ்வை இரசித்து அதேவேளை எதிர் கொண்டு போராடி முன்னேற வேண்டும். ஆகவே உளவியலாளரை அல்லது மீள் வாழ்வளிக்கும் நிறுவனத்துடன் அல்லது இருசாராருடனும் கலந்தாலோசிப்பது மிகச் சிறந்தது. உங்களைப் பற்றியோ அல்லது உங்கள் பிரச்சனைகள், இரகசியங்களை நிச்சயமாக அவர்கள் மிகவும் யாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொள்வார்கள். உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப, விபரங்கள் யாவும், உங்களின் சமூக நல உத்தியோகத்தருக்கே வெளியிடமாட்டார்கள்.

**35 26 99 55 என்ற உளவியலாளர் தொழிற்சங்க நிறுவனத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உளவியலாளர் உதவியை நாடலாம். அல்லது இதே இலக்கத்துடன் தொடர்பு கொண்டு center for selvmordsforebyggelse என்ற நிறுவனத் துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். இந்நிறுவனம் டென்மார்க்கின் பல இயங்கிவருகின்றது. தற்சமயம் இந்நிறு வனம் உங்கள் பகுதி களில் இல்லாது போனால், மேலுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

# சொல்லக் கொதிக்குது நெஞ்சம்...

........செ.யோகநாதன்



அந்த வாழை இலைகள் பச்சைப் பசேலென்று, மனதிற்குள் சந்தோஷத்தை தெளிப்பதாக சட்டென்று உணர்ந்தாள் புவனேஸ்வரி. அதன் ஸ்பரிசம் தன் புறங்கையைத் தடவினாற்போல இருந்தது. அத்தகைய கணப்பொழுது சந்தோஷம். அது உடனேயே அவளிலிருந்து உதிர்ந்து போய்விட்டதெனினும் அவளுக்கு ஆச்சரியமாகத் தான் இருந்தது. வரிசை வரிசையாகக் குழந்தைகள் போல பச்சைப் பசேலென்று அணி வகுத்து நிற்கின்ற வாழைக் கன்றுகள். இவை

ஒவ்வொன்றும் நிலத்தில் தடம் பதித்த இலை அவிழ்ந்து தளிர் மஞ்சள் இளம் பச்சையாகி பின்னர் கரும் பச்சை இலைகளை முழுமையாய் விரித்து அந்த வாழைக் கன்றுகள் வளரிளம் பருவத்தை தொட்டு நிற்கும் இந்த கணப் பொழுது வரை அவள் ஒவ்வொரு நாளும் இப்படித்தான் இவற்றின் இலைகளைத் தொட்டுப் பார்த்து தன்னை மறந்து போய்விடுகிறாள். அவளின் அருகே மிகவும் துடுக்குத் தனமாக கழுத்தைச் சரித்துப் பார்த்தபடியே இருக்கிற ஓணானை அவள் காணவில்லை. புவனேஸ்வரிக்கு ஓணானென்றால் வெறுப்பு. எரிச்சல். அதன் குரூரமான கண்கள், மொறமொறப்பான உடல். அதைக் கண்டால் உடலே கூசிப்போகும் அவளுக்கு. கிட்டத்தட்ட அந்த ஓணானைப் போலவே தான் அந்த அதிகாரியும் இருந்தான். அதே கண்கள். பசித்த பார்வை. வெறுப்பூட்டும் வார்த்தைகள்.அள்ளித் தெளிக்கிற ஏளனம். எதிலும் தளும்பி நிக்கிற குரூரம்.

மஞ்சளும் சிவப்பும் கலந்த வண்ணமாய், ஒரு இதழவிழ்த்த மலர் போல மஞ்சட்சுருளாய் நிமிர்ந்திருந்த வாழைக் குருத்தின் உச்சியிலே சிறகுகள் நடுங்கி வந்தமர்ந்த வண்ணத்துப் பூச்சியை நினைத்தாள் அவள். சுப்பிரமணியத்தின் நினைவு வந்தது. அவனுக்கு வண்ணத்துப் பூச்சியென்றால் மிகவும் ஆசை. அவை பறப்பதை, உட்கார்வதை, வினோதமாகச் சுற்றி வருவதைப் பேச்சற்றுப் பார்த்துக் கொண்டிருப்பான். ஒருநாள் கூட அவற்றை அவன் தொட்டதில்லை. "அதை அதன் பாட்டிலேயே விட வேணும்" என்பான் பெரிய மனிஷனின் தோரணையில். அவளது அண்ணன். பூவைக் கூடப் பறிக்கத் தயங்குகிற இரக்கம். அவளின் கண்கள் கலங்கின.

தானே சுதாகரித்துக் கொண்டு மீண்டும் வாழைக்கன்று களுக்கு நீர் வார்க்கத் தொடங்கினாள் அவள்.

தூரத்தில் பரஞ்சோதியும் கனகமும் சத்தமாகக் கதைத் துக் கொண்டிருப்பது தெளிவாகக் கேட்டது. பரஞ்சோதிக்கும் கனகத் துக்கும் எப்போது பார்த்தாலும் இணுவில் கிராமத்தைப் பற்றித்தான் பேச்சு. அவர்களுக்கு இணுவிலில்தான் சொந்தமாக வாழைத் தோட்டம் இருந்தது. இதே போலத்தான் செழிப்பான மண்ணும், பசுமையான வாழைக்கன்றுகளும்.

இப்போது எப்படியிருக்கும்? கனகமே ஒரு வெள்ளியன்று கண்ணீர் மல்கக் கூறினாள்: "என்ன மாதிரி இருந்த நிலம். பார்க்கப்

# தொலைந்துபோன முகமும் நினைவும்

நிலாக்கால இரவு
ஒரு கவிதைதானும் எழுதமுடியாத
அந்தக் கோர இரவில்
இந்த முகத்தைப் பார்த்தேன்

பனியால்
குளிரில் கிழிந்து
பாதியாய் அழுகிப்போன முகம்

மரணம்
கண்களுக்குள்
துளிகளைத் தள்ளிக்கொண்டிருந்தது

கண்டவுடன்
தன்னையும் என்னையும்
பக்கத்து மலரையும்
நினைவுகள் எரித்தது

இப்படியே
நீண்ட நாட்கள்
நினைவுகளை
மௌனமாய் கொழுத்தியபடி
ஒரு புழுவாய்க் கடந்துபோனது

பின்னாளில்
நான் காணும்
ஒவ்வொரு முகங்களும்
அந்தக் கொடுமைக்குள் புதையுண்டு
இந்த இரவு வீதிகளில்

குளிர்காலக் காற்று
என்னை கிழவனாக்கியது

என்னால்
ஒரு இரவைத்தானும்
முழுமையாய்த் தின்னமுடியவில்லை.

- ஆனந்தி. (சுவிஷ்)

பார்க்க ஆசை வரும். இப்போது ஷெல்லடிச்சு, நெரிஞ்சி முள்ளும் இக்கீரியும் நாகதாளியும் பற்றையாய்ப் போயிருக்கிற இடம். நினைச்சாலே அடி வயிறு பற்றி எரியுது..."

புவனேஸ்வரியின் மனம் கனத்தது. சொந்த நிலமும் வீடும் வாழைத் தோட்டமும் உள்ள கனகமும் பரஞ்சோதியும் இப்போது தினக்கூலியாக ஆறு ரூபா வாங்கிக் கொண்டு அகதி முகாமில்...

மூக்கைச் சீறிக் கொண்டாள் புவனேஸ்வரி. இரண்டு கிழமை அவளுக்கு சளி பிடித்தது. கல்பாரில் கட்டப்பட்ட தற்காலிகக் கொட்டகைகளில் அகதியாய் வாழத் தொடங்கியதிலிருந்து இப்படித் தான். கல், படை படையாகத் துரித்தித் தெரியும் அந்த ஒதுக்குப் புறத்தில் சின்னச் சின்ன குடியிருப்புகளாய் அந்த அகதி முகாம். நூற்றியெட்டுக் குடும்பங்கள். எப்போதும் கொதித்துக் கொண்டிருக்கிற நிலம். வெளியே இருந்து பரட்டைக் காடுகளை அளைந்து சலித்து மூர்க்கமாக வீசும் காற்று அனல் ஊசியாய் உடலினைத் துளைக்கும். வெய்யிலை பார்க்க கண்கள் எரிந்து கலங்கும். வலித்து நீர் சொரியும். இதைவிட அச்சமூட்டுகிற வீட்டுக் கூரை. தாரையும் காகிதத்தையும் கலந்து உருவாக்கிய அட்டையினால் வேய்ந்த கூரை. அனலடிக்கிற ஞாயிற்றுக்கிழமையன்று - வந்த புதிதில் கவலையும் களைப்புமாக படுத்திருந்தாள் புவனேஸ்வரி. அசதியில் புதைந்த நித்திரை. சட்டென்று முதுகுப்புறமாக கொதிப்புடன் விழுந்தது திரவத்துளி. உடல் சிலிர்த்து நடுங்கிற்று. எரிச்சலும் வேதனையுமாய் கலைந்த தூக்கக் கலக்கத்தோடு முதுகுப் பக்கம் அனிச்சையாகவே சென்றது இடது கை. இடது கையில் கொதித்து விழுந்தது இன்னொரு திரவத்துளி.

"ம்ம்மா" என்று கதறியவாறே எழுந்தாள்.

" என்ன பிள்ளை.... என்னணை அது? " பதறியவாறே உள்ளே வந்தார் கணபதிப்பிள்ளை.

" ஐயா முதுகிலை பாருங்க. "

முழங்கையைப் பார்த்தவாறே தகப்பனுக்கு முதுகு திருப்பினாள். முதுகுச் சட்டையில் கொட்டைப் பாக்குப் பரிமாணத்தில் திரண்டு கறுப்பாய் பளபளக்கிற தார்த்திரவம்.

பிரயத்தனத்துடன் அந்த பாதி திரவமும் பாதி கட்டியுமாய்

இறுகிப்போன தார்த் திரட்டை முதுகுச் சட்டையிலிருந்து இழுத்தெடுத்தார் கணபதிப்பிள்ளை. உடலெங்கும் நொந்தது.

" கூரையிலையுள்ள ஷீட் தாராலை செய்தது போலை இருக்குது. வெய்யிலிலை அது உருகி விழுகுது... கடவுளே, என்ன அநியாயம் இது... முழங்கையைக் காட்டு நாச்சியார்..."

வலியில் உதடுகள் துடிதுடிக்க, தார்த் திரவம் சொட்டி லேசாக அள்ளுண்டு சிவந்து போன முழங்கையை அவருக்குக் காட்டினாள் புவனேஸ்வரி. கண்ணீர் மல்கிற்று.

பின்னர் 'டொப் டொப்' என்ற மெல்லோசையுடன் நிலத்தில் தெறித்த தார்த் திரவத்தை வெறுமையாகவே பார்த்தார் அவர். மனதில் அக்னித் துளிகள் கொட்டின. நிலத்திலும் அனல்வெம்மை பாயாய் விரிந்து கொண்டிருந்தது.

" திண்ணைக்குப் போவம் வா பிள்ளை..."

" முழங்கைக்கு ஏதவன் மருந்து பூசவேணுமையா..." வேதனையோடு முனகினாள்.

"யாரைக் கேட்டுக் கொண்டு வெளியிலை போறது? அதிகாரிகள் யாருமில்லையே..."

அந்த ஓணானது முகம் மனதிலே தோன்றிற்று. வக்கிரமாய்ப் பார்த்தது. அசிங்கமாகச் சிரித்தது. உறுமிற்று.

அவள் வெளியே எரியும் வெயிலைப் பார்த்தாள்.

" ஐயா, எதுக்கு இஞ்சை வந்தம். வாருங்க, அண்ணனையும் தேடிக் கண்டுபிடிச்சுக் கொண்டு எங்கடை ஊருக்கே போயிடுவம். மானத்தோடை அங்கையே கொஞ்ச நாளைக் கெண்டாலும் இருந்து செத்துப் போயிடலாம்... அடிமையை விட கேவலமான வாழ்க்கையாப் போச்சு..."

கணபதிப்பிள்ளை மௌனமாயிருந்தார். குண்டு வீச்சில் இறந்து போன மனைவியையும் எரிந்து கருகிப்போன வீட்டையும் தனக்கு அருகே உணர்ந்தார்.

" ஐயா, எங்கடை மண்ணுக்குப் போவம். யாருக்கும் சுமையில்லாமல் யாருக்கும் பயமில்லாமல் எவரையும் கெஞ்சிப் பிழைக்காமல்.... இன்னும் கொஞ்ச நாளைக்கு இஞ்சை இருந்தனெண்டால் எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும்..."

விம்மல் அவள் வார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி இட்டது. கணபதிப்பிள்ளை சால்வைத் துண்டால் உடம்பில் பொங்கி வழிந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டார். " அண்ணனைப் பற்றிய மறுமொழி வரட்டும் பிள்ளை, போயிடுவம். நீ சொல்லுறதை நான் இல்லையெண்டு சொல்லேல்லை."

பூந்தென்றலாய் கற்றைக் காற்று தனது மனதினுள் தண்மையுடன் நிறைந்ததை உணர்ந்தாள் அவள்.

" நீங்க மெய்யாகவோ சொல்லிறியள்? "

பரவசம்.
" ஓம் பிள்ளை.."

" கடவுளாணை.." அவள் குழந்தையாய் அவரைப் பார்த்தாள். மெல்லச் சிரித்தார் அவர்: " நீ இவ்வளவு சொல்லுற போது நான் எப்படி நாச்சியார் அதைத் தட்டி நடக்கிறது.."

அவள் எல்லா வெம்மைகளிலிருந்தும் அந்தக் கணத்தில் விடுபட்டாள். கண்களில் நீர்த்திரை மறைத்தது. தன் வீட்டு முற்றத்தில் நின்றாள். அணிற்பிள்ளைகள் விளையாடும் மாதுளை மரங்களையும் முருங்கைகளையும் வாழைக்கன்றுகளையும் ஆவலோடு தொட்டாள். வெளியே எரியும் காற்றையும் வெயிலையும் மானசீகமாக லேசான துணியைப் போல உதறி வீசினாள்.

" ஓ.. புவனேஸ் புவனேஸ்.." என்ற குரலில் கவனம் மண்ணினில் பரவ, தன்னை சுயத்துக்கு கொண்டு வந்தவள் எதிரே நின்ற கனகத்தையும் பரஞ்சோதியையும் தயக்கத்தோடு பார்த்தாள். பின்னர் கைகளை உதறியவாறு, "போவமா? " என்றாள்.

கனகம் அவளை பரிவோடு பார்த்தாள். ஒரு செழித்த வாழைபோல அழகாக இருந்தவள் புவனேஸ்வரி. இரண்டு ஆண்டுகளில் எப்படி ஆகிப் போய்விட்டாள்? குலை வெட்டி நிலை

சரிந்து உடலெல்லாம் காய்ந்து பட்டை உதிர்ந்த வயதான வாழைமரம் போல.

" என்னணை நெடுநேரமாக யோசனையிலை நின்டனி.." இரக்கமாகக் கேட்டாள் பரஞ்சோதி.

" ஒண்டுமில்லை.."

" ஆர் ஆருக்கு ஆறுதல் சொல்லிறது? மங்கையர்க்கரசியா வும் நேற்று முழுதும் அழுது கொண்டிருந்தவ.."

" மகளை நினைச்சோ? " – சோர்வோடு கேட்டாள் புவனேஸ் வரி.

" ஓம்.."

" டொக்டர் என்ன சொன்னவராம்? "

" பிள்ளை அனேகமாகச் செத்துத்தான் பிறக்குமெண்டு சொன்னவராம். நல்ல இரக்கமான மனிஷன் அவர். எங்களிலை சரி யான இரக்கம் வைத்திருக்கிற மனிசன்.."

கனகம் வெறுமையாக புவனேஸ்வரியைப் பார்த்தாள்.

" ஏன் அப்படிச் சொல்லுறார்? "

" இந்த முகாமிலை நாங்க குடிக்கற தண்ணீர் சரியில்லை யாம். இந்தத் தண்ணீரைக் குடிச்சதாலை கர்ப்பத்திலை ஏதோ கிருமி பிடிச்சிட்டுதாம்.."

" கடவுளே.. அப்போ பாக்கியமக்காவும் ராணியும்.."

" அவையள் இன்னும் டொக்டரிட்டைக் காட்டப் போகேல் லை. ஆனால் பயந்து கொண்டிருக்கினம்.."

" மாசத்திலை பத்துநாள் கூடச் சீவிக்கப் போதாத உதவி. மாட்டுக் கொட்டிலைப் போலை வீடு. நாளுக்கொரு சட்டம்..அங்கையிருந்து வெளிக்கிடுகிறபோது ரவி அண்ணன் போகாதை பிள்ளை எண்டு கும்பிட்டுச் சொன்னவர்.."

"மங்கையர்கரசியாவின்ரை மருமகன் அங்கை என்ன வசதி-யோடை இருந்த ஆள். ரெண்டு வீடு. வயல். தென்னங்காணி. ராசாத்தி போலை அன்பரசியை வைச்சிருந்தவராம்.."

பரஞ்சோதி பெருமூச்செறிந்தாள், " எப்போ நாங்க எங்கடை மண்ணிலை போய் நிம்மதியாகச் சீவிக்கப் போறம்? "

கொழுந்து விட்டெரியும் நெருப்பும் கருகிப்போன தாயின் உடலும் புவனேஸ்வரியின் கனவிலும் நினைவிலும் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. திடீரென வீரிட்டு அலறுவாள். தலை தலையாக அடித்துக் கொள்வாள். மறுகணமே மௌனமாகி திகைத்துப் போய் அசைவற்றிருப்பாள். பிறகு விம்மி விம்மி அழுவாள்: " அம்மா அம்மா, எங்களின்ரை கண்ணுக்கு முன்னாலையே எரிஞ்சு கருகிப் போனியளே.. என்ரை அம்மா.."

கணபதிப்பிள்ளை வாயைப் பொத்திக் கொண்டு விசும்புவார். அவரது மகன் சுப்பிரமணியம் கறைபடிந்த வானத்தையே வெறுமையாகப் பார்த்துக் கொண்டு நிற்பான்.

என்ன இருக்கிறது அவர்களிடம்? இந்தக் குண்டுவீச்சில் எல்லாமே போய்விட்டது. படிக்கிற புத்தகங்களிலிருந்து உடுக்கிற துணிகள் வரை. இப்படி எத்தனை பேர்.

ஐயாவிடம் கந்தசாமி சொன்னார்: " உலகநாடுகள் எல்லாம் இனக் கொலைக்கு ஆட்பட்டிருக்கிற இலங்கைத் தமிழருக்கு அடைக்கலம் கொடுக்குது. ஐரோப்பிய நாடுகளிலை அகதியாய்ப் போனால் அகதி அந்தஸ்த்து, வேலை கிடைக்கும் வரை உதவிப் பணம், வீட்டு வசதி, பண்ட பாத்திரம் எல்லாம் குடுக்கிறார்கள். படிக்கிற வசதி, பிள்ளைகள் பிறந்தால் உதவிப்பணம்.."

கணவதிப்பிள்ளை மௌனமாக இருந்தார்.

" இதை நான் காரணத்தோடுதான் உங்களுக்குச் சொல்லுறன். புவனேஸின்ரை நிலைமை மெத்தக்கவலையாயிருக்கு. இந்தச் சூழ்நிலையிலை அவள் இருந்தால் இன்னும் கொஞ்சநாளிலை அவளுக்குப் பைத்தியம் பிடிச்சுடும். அதைவிட சுப்பிரமணியனும் மூளைசாலி. படிச்சானெண்டால் பெரிய ஆளாய் வந்திடுவான். அருமையான பிள்ளைகள் உங்களுக்கு.."

கேள்விகள் நெற்றிச் சுருக்கங்களாய் கணபதிப்பிள்ளை யின் முகத்தில் தெரிந்தன.

" என்னட்டை என்னடா தம்பி இருக்கு? வீடு வாசல் நகை நட்டெல்லாம் எரிஞ்சு சாம்பலாப் போச்சு? இந்த நிலைமையிலை எங்கை கடன் வாங்க முடியும். சொல்லு பார்ப்பம்.."

கந்தசாமி நெற்றியைத் தடவிக் கொண்டார்.

" நீங்க சொல்லுறதும் மெய்தான்.அப்படியெண்டால் நீங்க இந்தியாவுக்கு போனால் என்ன? நிறையப் படகுகள் போகத் தொடங் கியிருக்குது.."

கணவதிப்பிள்ளை கந்தசாமியை ஏறிட்டார்.

" தமிழ்நாடு எங்களைப் பாதுகாக்கும். சொந்தச் சகோதரர் மாதிரி ஆதரிக்கும். நல்ல சனங்கள். பிள்ளைகளை அங்கை படிக்க வையுங்க.நிலைமை சரிவாற வரை அங்கை இருங்க. புவனேஸ் கூட புதுச் சூழ்நிலையிலை கவலையை மறந்திடுவாள்.."

" அப்போ நீ? "

" எனக்கு ஆரணை அண்ணை இருக்கினை. எல்லாரும் என்னை விட்டிட்டுப் போயிட்டினை..நான் காவோலை.."

இரக்கமாக அவரைப் பார்த்தார் கணபதிப்பிள்ளை. அவரை யறியாமலே கண்கள் கலங்கின.

ராமேஸ்வரத்தில் வந்து இறங்கும் வரை கணபதிப் பிள்ளைக்கு நெஞ்சு தடதடவென்று அடித்துக் கொண்டிருந்தது. புவனேஸ்வரியும் சுப்பிரமணியனும் முகம் இறுகிப் போயிருந்தனர். எல்லாம் முடிந்து திரள் திரளாகப் புகையிரதத்தில் ஏறினர். வழியிலே மயங்கிச் சரிந்த கிழவி ஒருத்தியை சுப்பிரமணியன் கைத்தாங்க லாகப் பிடித்துக் கொண்டான். கிழவியின் கை அவனைக் கெட்டியாகப் பற்றியிருந்தது. புகையிரதத்திலிருந்து இறங்கியவர்கள் வரிசை வரிசையாக பஸ் வண்டிகளில் ஏறினர்.

ஒரு விடிகாலையில் பஸ் வண்டி அவர்களை அந்த பரந்த

இடத்தில் இறக்கிவிட்டது. எல்லாரும் நித்திரைக் கலக்கத்தில் இருந்தனர். குளிர் காற்று முகத்தில் அறைந்தது.

புவனேஸ்வரி சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்கள் களைத்தன. பரபரப்போடு சொன்னாள்: " ஐயா, அண்ணனைக் காணவில்லையே..."

அந்த அதிகாரியின் முன்பணிவோடு நின்றார் கணபதிப் பிள்ளை. கெஞ்சி மன்றாடினார். கண்கள் கலங்கின: " ஐயா, ரெண்டு வருஷமா நான் என்ரை பிள்ளையைத் தேடுறன். எங்களோடை வந்தவன் தவறிப் போயிட்டான். எத்தனையோ மனு கொடுத்திட்டன். ஒரேயொரு ஆண்பிள்ளை... பெரிய அதிகாரி ஐயாவுக்குக் கூட மனு அனுப்பினன். எங்கேயாவது ஒரு அகதி முகாமிலைதான் இருக்க வேணும். எங்களைச் சேர்த்து வைச்சிடுங்க ஐயா..."

அதிகாரி சாதாரணமாகச் சொன்னார்: " லட்சம் பேருக்கு கிட்ட 'கேம்ப்'பிலை இருக்காங்க. எங்க போய்த் தேடறது? எதுக்கு இப்ப பையனைத் தேடறே.. குண்டுவீச்சில செத்திட்டதா நினைச் சுக்கோ.. விவகாரம் பண்ணாதே.."



அதிகாரி, முகாமின் வாசலில் நின்ற ஜீப்பை நோக்கி நடந்தார். பளீரென்று இடியொன்று இறங்கினாற்போல அதிர்ந்து, திகைத்து நடுங்கிப் போய் நின்றார் கணபதிப்பிள்ளை. இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டு நின்ற இளநிலை அதிகாரி ஒருவர் கண்களில் பரிவு தொனிக்க கணபதிப்பிள்ளையின் அருகே வந்தார்.

" என்ன பேர் சொன்னீங்க? "

கணபதிப்பிள்ளை ஏக்கத்தோடு அவரைப் பார்த்தார்.

" வயசு சொல்லுங்க.."

" இருபத்திநாலு வயசு, ஐயா. "

" சிலோன்ல உங்க ஊர்? "
சொன்னார்.

இளநிலை அதிகாரி எதையோ யோசித்தார். தயக்கத்துடன் தனது ' பிரீப் கேஸில் ' இருந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்தார். முகத்தில் கவலை படர்ந்தது.

" சொல்லக் கஷ்டமாயிருக்கு... உங்க பையனை சிறப்பு முகாமில நேற்றுத்தான் அடைச்சிருக்கிறாங்க..."

" ஐயா.."

" ஆமா. தான் இருந்த 'கேம்ப்'பை விட்டு 'பர்மிஷன்' இல்லாம ஊர் ஊரா உள்ள 'கேம்ப்' எல்லாம் போயிருக்கிறான். அவன் பேர்ல 'காம்ப்ளயிண்ட்' கொடுத்திருக்காங்க. முந்தாநாள் பஸ்ல வாற போது போலீஸ்காரங்க பிடிச்சிட்டாங்க... அவன் பேர்ல சந்தேகம் இருக்கிறதா சொல்றாங்க..."

" ஐயா ஐயா " பதறினார் கணபதிப்பிள்ளை. "என் பிள்ளை, நல்ல பிள்ளை. எந்த சோலி, சுரட்டுக்கும் போகாதவன். எங்களைத் தான் அவன் தேடித் திரியிறான். சிறப்பு முகாம் என்றால் என்ன மாதிரி ஐயா? என்ரை பிள்ளையை நான் பார்க்கிறதுக்கு உதவி செய்யுங்க... உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும்..."

இளநிலை அதிகாரி கருணையோடு அவரைப் பார்த்தார்.

" என்னாலை என்ன செய்ய முடியும்? சிறப்பு முகாம்னு பேச்சு தான். ஆனால் அது... வேணாம். நான் சொல்ல வேணாம்..."

இளநிலை அதிகாரி அங்கிருந்து புறப்பட்டார்.

கணபதிப்பிள்ளையின் உடல் திடீரென்று நடுங்கி அதிர்ந் தது. மூட்டுகள் நடுங்கின. தானே குலுங்கினாற் போல நிலத்தில் சரிந்து ஒரு காலையும் கையையும் பரிதாபமாக இழுத்து இழுத்து வேதனையோடு உதறினார். முனகினார். பக்கத்தில் நின்றவர்கள் அவரைத் தூக்கிக் கொண்டு குடிசைக்குச் சென்றனர்.

பாரிசவாதத்தால் படுத்திருந்த கணபதிப்பிள்ளை மக ளையே நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். பெருமூச்சு அனலாய் சீறிற்று.

" பிள்ளை.."

" என்ன ஐயா வேணும். தண்ணீர் தரவோ? "

" இல்லை...இஞ்சை ஒருக்கால் வாணை..."
போய் அருகே உட்கார்ந்தாள்.

" சொல்லுங்க. "

" பிள்ளை. " தயங்கினார்.

" சொல்லுங்கோ..." கனிவோடு அவரைப் பார்த்தாள்.

" எனக்கு மனதிலை ஒரு பெரிய குறை இருக்கு..."

அவள் நெகிழ்வோடு கேட்டாள்: " என்னய்யா? "

" நான் உங்களை இஞ்சை கூட்டிக் கொண்டு வந்திருக்கப் படாது... பெரிய பிழை விட்டிட்டன்..."

" ஒரு பிழையுமில்லை. இப்ப அதுக்கென்ன? உங்களுக்குச் சுகம் வந்த உடனே அண்ணனையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போயிடுவம்..."

அவர் கண்களிலிருந்து பொட்டென்று கண்ணீர் உடைந்து சிதறிற்று. வார்த்தைகள் அழுகையில் கரைந்து மிதந்தன.

" ராசாத்தி... எனக்கு என்னவோ சொல்லுது. நான் இண் டைக்கோ நாளைக்கோ போயிடுவன் போலை இருக்கு...."
அவள் குறுக்கிட்டாள். உறுதியோடு அவரைப் பார்த்தாள்.

" ஐயா, உங்களுக்கு ஒண்டும் வராது. இதென்ன பெரிய வியாதியோ? பயப்படாதீங்க..."

விரக்தியோடு புன்னகை செய்தார் அவர்.

" அந்த நல்ல மனிஷன், டொக்டர் உன்னோடை நல்ல அன்பானவர். அதனாலை அவர் உனக்கு இதைச் சொல்லேல்லை..."

" ஐயா..."
அவள் விம்மினாள்.

அழகாகக் கட்டப்பட்டிருந்த அந்த வேலியை மகிழ்ச்சியோடு பார்த்தார் அரங்கராசன். தாறுமாறாக வளர்ந்திருந்த அலரிச் செடிகளை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டு புதிய வாழைக்கன்றுகளை நடுவதில் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறார்கள் இந்த மூன்று பெண்களும் என அவர் மனதினுள் வியந்து கொண்டார்.

அவரைக் கண்ட பரஞ்சோதியும் புன்னைகையோடு. " ஐயா, நீங்க சொன்ன மாதிரியே எல்லாம் செய்திட்டோம். புவனேஸ்தான் களைக்காமல் எல்லாம் செய்தது..."

" நீங்க பேசிற தமிழ் போல நீங்க செய்யிற வேலையும் அழகாயே இருக்குது. ஆமா புவனேஸ் எங்கே? "

பரஞ்சோதி சிரித்தாள். " தனக்குச் சரியான பசியாம். எங்களை விட்டிட்டு முன்னதாகச் சாப்பிடுறா..."

" என்ன ஸ்பெஷல் சாப்பாடா? "

" அதோ வாறா, நீங்களே கேளுங்க..."
சொல்லியவாறு அங்கிருந்து சென்றாள் பரஞ்சோதி.
புவனேஸ்வரி வணக்கம் சொன்னாள் அவருக்கு.


" என்னம்மா, நமக்கு சாப்பாடு தரமாட்டியா? "

லோசான புன்னகையோடு அவரைப் பார்த்தாள் அவள்.

" ஐயோ, உங்களோடை நான் கொஞ்சம் கதைக்க வேணும். கேட்பீங்களோ? "

" என்னம்மா... என்ன சொல்லு? "

" ஐயா, நீங்க எனக்குச் செய்த உதவி பெரிய உதவி ஐயா. எங்களிலை அன்பாயிருந்தீங்க. இதை எத்தனை ஜென்மத் துக்கும் நான் மறக்க மாட்டன்..."



" கெட்டு நொந்து போய் வந்த உங்களுக்கு உதவி செய்ய வேண்டியது எனக்குக் கடமையாய் தெரியுது. இப்போ அதுக்கு என்ன? "

அவள் மெதுவாக தரையோடு சாய்ந்தாள்.

" என்னம்மா... என்ன... என்ன ஆச்சு? "

திடுக்கிட்டுப் போனார் அவர்.

" ஐயா, எனக்கு இன்னொரு உதவி செய்யுங்க..."

" சொல்லு..."

" ஐயா, என்னையும் என்ரை ஐயாவையும் செத்த பிறகு நீங்கதான் கொள்ளி வைக்கவேணும். எங்களின்ரை சாம்பலை தெற்குப் பக்கம் வீசுகிற காற்றிலை போக விடுங்கய்யா... அது எங்களின்ரை மண்ணுக்குப் போகவேணும்...ஐ...ய்யா..."

அவள் தன்னை விலுக் விலுக்கென்று உதறினாள்.

வேலியோரமாக அரளிச் செடிகளை அகற்றிக் கொண்டிருந்த பரஞ்சோதி, அவை ஒன்றிலும் விதை காணப்படவில்லையே என்று ஆச்சரியப்பட்ட போது அரங்கராசனின் "ஐயோ" என்ற வீரிடல் அவளை மேலும் திகைக்க வைத்தது.

(நன்றி இந்தியன்டுடே)

# இந்தியாவில் தமிழீழ அகதிகளின் நிலை...?

## 1996 யூலை புள்ளி விபரப்படி தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகள்:

| மாவட்டம் | முகாம்களின் தொகை | மக்கள் தொகை | மொத்த குடும்பங்கள் |
|---|---|---|---|
| இராமநாதபுரம் | 05 | 6435 | 1651 |
| வடஆற்காடு | 09 | 4852 | 1236 |
| தென்ஆற்காடு | 06 | 3170 | 779 |
| சம்புவராயர் | 12 | 4286 | 1113 |
| செங்கை M.G.R. | 09 | 4296 | 1069 |
| சிதம்பரனார் | 03 | 2018 | 486 |
| காமராசர் | 07 | 4463 | 1105 |
| கன்னியாகுமரி | 05 | 1667 | 422 |
| நெல்லை கட்ட பொம்மன் | 07 | 3686 | 939 |
| சேலம் | 12 | 4738 | 1307 |
| தர்மபுரி | 13 | 4778 | 1215 |
| பெரியார் | 07 | 5025 | 1285 |
| கோவை | 15 | 3842 | 979 |
| திண்டுக்கல் | 08 | 4653 | 1169 |
| பசும்பொன்தேவர் | 07 | 4367 | 1125 |
| மதுரை | 04 | 7010 | 1797 |
| திருச்சி | 03 | 4373 | 1175 |
| புதுவை | 05 | 6526 | 1700 |

**இந்தியாவில் அகதி முகாம்களிலுள்ள மக்கள் தொடர்ந்து பல பிரச்சனைகளை அனுபவித்து வருகின்றார்கள்.**

■ இந்திய மத்திய - மாநில அரசுகளால் தமிழீழ அகதிகளுக்கு "அகதி அந்தஸ்து" வழங்கப்படவில்லை.

■ அகதிகளுக்கான அரசின் உதவிப்பணமோ, பொருளோ ஒருவரின் கால் வயிற்றைக் கூட நிரப்பப் போதாதுள்ளது.

■ அகதிகள் முகாமிற்கு வெளியே போக - வர நேரக்கட்டுப்பாடு விதித்துள்ளதால், எவரும் வேலை செய்ய முடியாதுள்ளது.

■ மண்டபம், கொட்டப்பட்டு, விளாங்குடி, பெரியார் நகர், ஆணையூர் முகாம்கள் மட்டுமே ஒழுங்காக கட்டப்பட்டவை. மற்றைய முகாம் களில் பெரும்பாலாவை ஒதுக்குப்புறமாக உள்ளதுடன், சாதாரண வெயில் மழைக்குக்கூட தாங்கக்கூடியனவாக இல்லை.

■ பெரும்பாலான முகாம்களில் மலசல கூட வசதி இல்லை. தண்ணீர், மின்சாரம் இல்லை, மின்சார இணைப்புள்ள சில முகாம்களில் எப்போது என்ன நடக்கும் என்ற வகையில் தாறுமாறான பாதுகாப்பற்ற முறையில் உள்ளது. மல சல கூட பிரச்சனைகளால் தொற்று நோய்கள் அதிகமாகவுள்ளது.

■ உள்ளூர் பொலிசார், முகாம் பொலிசார், உளவுப் பிரிவினர், அதிகாரிகள் இவர்களின் கையூட்டு தொந்தரவுக்கு எல்லையில்லை. மறுத்தால் புலிகளுடன் தொடர்புபடுத்திவிடுவர், சில முகாம்களில் பொலிஸ் நிலைய வளாகம் சுத்திகரிக்க அகதிகளை நிர்ப்பந்தப் படுத்தி கூட்டிச் செல்கின்றார்கள். இளம் ஆண்களும்-பெண்களும் பாலியல் பலாத்காரத்துக்கான நிர்பந்தங்களுக்கு முகம் கொடுக் கின்றனர். இவற்றை எதிர்த்தால் விசாரணை இன்றி, முன்னறிவித்தல், உறுதிப்படுத்தல் இன்றி சிறப்பு முகாம்களிற்கு மாற்றிவிடுவது கேட்டு கேள்வி இன்றி நடக்கிறது. மதுரை முகாம் ஒன்றில் ஒரு பெண்ணை பலாத்காரப்படுத்துவதில் ஏற்பட்ட மோதலில் ஒரு பொலிஸ்காரர் தலைமைக் காவலர் ஒருவரைச் சுட்டுக் கொன்றார். வேலூர் சிறப்பு முகாமில் பொலிசாரால் ஒரு பெண் பாலியல் உறவுக்கு கட்டாயப் படுத்த அதை மறுத்த பெண்ணை கஞ்சா வழக்கு போட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இது போன்ற விசயத்தை மணப்பாறை முகாமில் கண்டித்த 85 வயது கந்தையாவை புலி எனக் கூறி சிறப்பு முகாமுக்கு மாற்றினர் அதிகாரிகள்.

■ அகதிகளின் அன்றாட வாழ்வு, பசி, பட்டினி, கர்ப்பிணிப் பெண்களுக்கு சரியான மருந்துகள் இல்லை, பிள்ளைகளுக்கு ஊட்டச் சத்து பால் இல்லை, வேலைக்கு போக வழியில்லை, வேலையில்லை, எல்லாவற்றுக்கும் பணம் இல்லை, இவற்றால் விரக்தியடைந்த சிலர் தற்கொலை செய்ய முயல்கின்றனர்.

■ அகதி மாணவ-மாணவியர்களின் கல்விக்கும் கூட சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது. கல்விக்கு இருந்த தடை தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆயிரம், இலட்சம் என்று இலஞ்சம் கொடுத்துப் படிக்க அகதிகளுக்கு என்ன வழி? கல்வி கற்கும் வயதில் உள்ள சிறுவர்கள் லாட்டரி சீட்டு விற்றுப் பிழைக்கின்றனர். மதுபானக் கடை, மளிகைக் கடைகளில் அற்ப கூலிக்காக தமது மழலைக் கனவுகளை தொலைத்து குழந்தைத் தொழிலாளர்களாக வேலை செய்து மாய்கின்றனர். மேற்படிப்பை தொடர முடியாத ஆண்-பெண் மாணவர்கள் எதிர்காலத்தை பறி கொடுத்த விரக்தியில் தத்தளித்துப் போயுள்ளனர்.

சிறப்பு முகாம்களில் பாதுகாப்பு என்ற பெயரில் 24 மணி நேரமும் சிறிய அறைகளிலேயே அடைத்து வைக்கப்படுகின்றனர். காற்றோட்ட வசதி இல்லாத இவ் அறைகளில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அடைத்து வைக்கப்படுவார்கள். இவ் எண்ணிக்கை ஐந்து ஆறையும் தாண்டும். துர்நாற்றமும், வெப்பமும் நிறைந்திருக்கும் இந்த காரை பெயர்ந்த அறைக-ளில் தான் இவர்கள் உண்ண, உறங்க வேண்டும், மலசலம் கழிக்க வேண்டும். கொசுவும், மூட்டைப் பூச்சியும் இவர்களுடன் வாசம் செய்யும். எந்தவித பொழுது போக்கும் அற்ற, மன அமைதியின்மையை ஏற்படுத்துகின்ற இயந்திர வாழ்க்கை அவர்களை மன நோய் பிடித்தவர்களாக மாற்றிவிடுகிறது. மருத்துவ வசதி எதுவும் இல்லாத நிலையில் வட்டாட்சியர், கியூ உளவு பிரிவு அதிகாரிகளின் அனுமதி பெற்ற பின்னே பொலிஸ் காவலுடன் மருத்துவமனைக்கு செல்ல முடியும். திடீ-ரென்று ஏற்படும் தீவிரமான நோய்களுக்கான முதலுதவி வசதிகூடக் கிடையாது.

எம்மினத்தவர்கள், எங்களை பாதுகாப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் சொந்தமண்ணை விட்டு தஞ்சம் கேட்டு தமிழ் நாட்டிற்கு புலம் பெயர்ந்த எமது தமிழ் மக்களின் வாழ்க்கை, இன்று இரட்டிப்பான துன்பங்களிற்கும்-கேள்விக் குறிகளுக்கும் ஆளாகியுள்ளது. நாளுக்கு நாள் இவர்களுக்கு பிரச்சனைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. தமிழக அரசும், தலைவர்களும் இவர்கள் பிரச்சனை களை கண்டு கொள்வதாக இல்லை. இவர்களுக்காக எவரும் குரல் கொடுப்பதாகவில்லை. தொடர்ந்தும்...??????

(நன்றி - அகதியின் குரல்)

# மயிராய் மதிபடும்...

மண்ணில் மலர்வது
அதிலே வீழ்ந்து
அதன் வாய் போகும்.

இதற்காக...
எதிலும் மேலான எங்களின்
உயிர்களும் மயிராய்
அதன் வாய் போகும்.

எங்கள் தேசத்து மண்ணைக்
கிளறின் துச்சமிகு
மயிர்களே வெளிக்காண
எம் தேசத்து மண்ணே
மயிர் மேடாய்க் காட்சி தரும்.

மண்ணென்ன!
மண்ணே எதிர்பார்க்கும்
எந்த விடிவும் வருவதற்குள்
மண்ணுக்காய் மயிரான
உயிர்கள் மேல்
ஏர்பிடித்து எம் கரங்கள்
மயிர் வேரறுத்து
உழுது செல்லும்.

குருதி குடித்துப்
பிதிர்த்துப்போன வயல்
நிலங்கள் நிலாமுற்றம்
எதிரியாய் எமைப் பார்த்தும்
எவரையும் மயிராய்ப்
பசளையாய் அதன்
வாய் கொள்ளும்.

மண்ணின் பசி
அடங்காதென்று(ம்).

- லோகநாதன்.செ.

**டென்மார்க் பெடகோ இன்ஸ்ரிற்ரியூட் உலகளாவில் செய்த "சமூக மாதிரியை உடைத்தவர்கள்" என்ற ஆய்வு அறிக்கையில் மொத்தம் 180 பேரில் 27 பேர் "சமூக மாதிரியை உடைத்தவர்கள்" என அறிந்து கொண்டனர். அந்த 27 பேரில் இருவருடைய சில விபரங்களும், சில முக்கியஸ்த்தர்களின் கேள்வி, பதில்களும் இங்கு கட்டுரையாக அமைகிறது.**

சமூக ஓட்டத்துடனும், அதன் பண்பாடுகளுக்கு அமையவும், தன்னை இணைத்துக் கொள்ளாது, அதற்கு முரண்பாடாகச் செயற்படுவோரை, அந்தச் சமூகம் ஏதோவோர் வகையில் புறக்கணித்துக் கொண்டே இருக்கும். அத்துடன் மட்டும் நின்றுவிடாது, அவர்கள்மீதான எதிர்கால நம்பிக்கையினை இழந்தும், அவர்கள் இந்தச் சமூக இயக்கத்திற்கு தேவையற்றோர் எனவும் புறந்தள்ளியிருக்கும். இந் நிலையினைப் புரிந்தோ அல்லது இந்தச் சமூகத்தில் தானும் ஓர் அங்கம் என, அந்தச் சமூக ஓட்டத்திற்கு ஏற்ப, தன்னை மாற்றி அமைத்து, இலட்சியக் குணாம்சத்துடன் புது மனிதனாக வெளி வருவதென்பது சுலபமானது என்று, தமக்கு இளவயதில் ஏற்பட்ட ஏமாற்றங்களையும், பின்பு தமது வாழ்வில் இடம் பெற்ற சம்பவங்களி னையும், சோர்ந்து போகாமல் தமது செயற்பாட்டின் மூலம் தாம் கொண்ட வெற்றிகள் பற்றி, இங்கு இவர்கள் விமர்சிக்கின்றார்கள்.

உலகளாவிய அனைத்து சமூகங்களிலும் இருக்கின்ற இந் நிலைக்குள் சிக்கியுள்ளோர்கள், தம்மை மாற்றிக் கொள்ள முடியாதும், தம்மைக் குறைபாடு உள்ளோர் என, மனம் வருந்தியும், தம்மை எப்படி மாற்றிக் கொள்வதென்று புரியாமலும், திண்டாடுவோர் பலர் உள்ளனர். அவர்கள், இந்த மாதிரிக்குரியோர் போன்று, தம்மையும் இலகுவாய் மாற்றிக் கொள்ளலாம்.

# சமூக மாதிரியை
# உடைத்தவர்கள்.....

தமிழில்...
திருமதி: வேதா இலங்காதிலகம்.

குழந்தைகளும் இளைய வயதினரும் பாதிக்கப்பட்ட சூழலில் இருந்து வெளியேறி, தமது சொந்த வாழ்க்கையை நல்ல வகையில் அமைக்க, தொழில் திறமை வாய்ந்தவர்களுக்கு (PROFESSIONELLE) சமூகத்தில் காத்திரமான பொறுப்பு உண்டு. இவ்வகையில் பாடசாலை ஆசிரியர், குழந்தைநல ஓய்வு நிலைய பொறுப்பாளர், சமூக ஆலோசகர், மனோவியலாளர் முக்கிய பங்கை வகிக்கின்றனர்.

பீற்றர் 18 வயது.

மது பாவனையால் பாதிக்கப்பட்ட வீட்டில் வளர்ந்தவன். அம்மாவின் அரவணைப்போ அன்பான வார்த்தைகளோ அறியாதவன். அப்பாவின் உருவமே தெரியாதவன். 8 வயதில் முதன் முதலில் களவெடுத்தான். 16 வயதில் களவு வன்முறைகளால் நிபந்தனையுடைய தண்டனையை அடைந்தான். ஆனால் இன்று ஒரு நல்ல வேலை, நல்ல காதலி என தீர்மானித்த முடிவுடன் கிரிமினலை பின்னால் தள்ளிவிட்டு தான் முன்னேறிச் செல்வது என சந்தோசமாக உள்ளான்.

லைலா 28 வயது.

குடி, வன்முறை. அன்பு, ஆதரவற்ற குடும்பத்தில் மூன்று ஆண்சகோதரங்களுடன் பிறந்தவள். முக்கால்வாசி குழந்தைப் பருவமும் சகோதரர்களை ஆதரிப்பதிலும், அனாதைக் குழந்தை, இளவயது விடுதியிலும், மனோ சிகிச்சை நிலையங்களிலும் கழிந்தது. இன்று அரசியலில் ஒரு பட்டதாரியாகவும், ஒரு வங்கியில் தொழிற்துறையை முன்னேற்றும் ஒரு பொறுப்பு அதிகாரியாகவும், இரண்டு குழந்தைகளுக்கு தாயாகவும், மூன்றாவது குழந்தையை எதிர்பார்த்தபடி உள்ளார்.

பீற்றர், லைலா இருவருக்கும் சமமான, கொடுமையான வளர்ச்சிப் பருவம். ஆனால் இருவரும் குடிகாரன் பிள்ளை குடிகாரன், திருடன் பிள்ளை திருடன் எனும் "சமூக மாதிரியை உடைத்தவர்கள்" ஆக உள்ளனர். அல்லது அந்த சமூக மாதிரியை உடைக்கும் வழியில் சென்றுகொண்டு உள்ளனர் என ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர்.

குடி, வன்முறை, பொருளாதார, குடும்ப பாதிப்புகளால் அழுத்தப்பட்ட குடும்பத்தில் இருந்து வந்ததால் அவர்களின் கணக்கெடுப்பின்படி இருவரும் பாதகமான பாதிப்புக்கு உரிய குழுவிலேயே வைக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் பெற்றோர், சகோதரர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவர்கள் வித்தியாசமாக முன்னேறி வந்துள்ளனர்.

காரணம் என்ன?

பீற்றர், லைலாவிடம் கேட்டால் "ஒரு பெடகோவும் ஒரு ஆசிரியரும் என்னை நம்பினார்கள்... நான் புத்திசாலி என அவர்கள் கூறி அறிந்தேன்... ஒரு படிப்பை தெரிவுசெய்து படித்தேன். நல்ல வேலை, நல்ல காதல் வாழ்வு கிடைத்தது..." என்கிறார்கள்.

ஆராச்சியாளர்களிடம் கேட்டால்....

"பீற்றருக்கும், லைலாவும்கும் ஆரோக்கியமும் மன பலமும் முதலீடாக இருந்தது. அதைவிட சில பெரியவர்கள் அவர்கள்மேல் கண்ணும் கருத்துமாக இருந்தது அவர்களுக்கு மிக ஆதரவைத் தந்தது. இது மிக

பெறுமதி வாய்ந்ததாக அவர்களுக்கு இருந்தது..." என பதில் வந்தது.

ஆராச்சியாளர்களின் முடிவுப்படி, பிள்ளையின் நுண்ணறிவு, புத்திக் கூர்மை மட்டும் அல்ல "அந்த நெருக்கமான உறவு" தான் இவர்களை நல்லவர்களாக உருவாக்க உதவியது என்கிறார்கள். (சம்பந்தப்பட்ட தொழில்முறை வல்லுனர் களுடன் ஏற்படும் உறவு)

பீற்றர் புகையிரத நிலையத்தில் வட்டமிட்டு ஓடும்போது, பெரிய கடைகளிலோ அல்லது தெருக்களிலோ, கூட்டமாக கடை உடைத்து களவு எடுத்தபோதோ, பீற்றரின் ஓய்வு நேர பாடசாலைகளில் கூட யாரும் அவனது பிரச்சனைகளைக் கணக்கு எடுக்கவில்லை. அவன் களவில் பிடிபட்டு பாதுகாப்புச் சிறையில் வைக்கப் பட்டபோது, AVEDORE ல் உள்ள சோஷல் பெடகோ தங்கும் இடமான பிளேக் குட்டனில்(BLÆKSPRUTTEN) பரிசோதிக்கப் பட்டார். அப்போது தான் அந்த நிகழ்வு நடந்தது.

**பீற்றர்:**

அம்மாவுக்கு தெரியும் எனது நண்பர்கள் கிரிமினல்கள் என்று. ஆயினும் நான் அவர்களுடன் கலக்கவில்லை என அவர் நம்பினார். நான் தூள் வாங்கக் கூட காசின்றி, குடிக்கும் என் அம்மாவின் நிலையிலும் மோசமான நிலைக்கு வந்தேன். ஒரு முறை ஒரு மனிதன் மேற்பாய்ந்து, அவனை அடிக்காமல் அவனது காசைத் தரும்படி பயமுறுத்தினேன். பின்னர் பொலீசில் பிடிபட்டு, நீதி மன்றத்துக்கு கொண்டுவரப் பட்டோம். இரண்டு கிழமைக்கு தீர்ப்பு எழுதப் பட்டது. என்னை எனது கூட்டாளிகளிடம் இருந்து பிரித்து வேறாக வசிக்க நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்ததால், எனக்கு கொமூன் இடம் தேடும்வரை, அது மூன்று கிழமைகளாக நீடித்தது. எனது விடயங்களைக் கையாளும் சமூக சேவகருக்கோ எனக்கு இடம் தேட விருப்பம் இல்லை. ஆதலால் சோஷல் பெடகோ நிலையமான பி-ளேக்ஸ்புட்டேனின் தலைவர் அகமத் டெய்மர் (AHMAD DEIMER) வந்தார். இலவச கேக் உணவுகள் கிடைத்ததால் நான் இடையிடையே கூட்டாளிமார்களுடன் பிளேக்ஸ்புட்டேனுக்கு போய் வருவதுண்டு.

**கேள்வி:**

தலைவர் அகமத் என்ன செய்தார்?

**பீற்றர்:**

நான் மறியலில் இருந்தபோது எனக்கு தொலைபேசி எடுத்தார். (அகமத் ஒரு முக்கிய காரண கத்தாவாக இருந்தார், பீற்றர் கிரிமினலில் இருந்து விலகுவதற்கு)

**கேள்வி:**

அகமத் உனக்கு என்ன வழியில் உதவி செய்தார்?

பிளேக்ஸ்புட்டேன் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?

**பீற்றர்:**

அகமத் மிகவும் நம்பினார், நான் இதிலிருந்து வெளிவர முடியும் என்று. மனிதன் தானாக திருந்த நினைக்காவடில் பிளேக்ஸ்புட்டேனை

பயன்படுத்த முடியாது. அப்படி திருந்த நினைத்தால் ஒருவனுக்குத் அத்தனை உதவியும், ஆதரவும் அங்கு கிடைக்கும். சிறையில் இருந்த போது நானாக முடிவு செய்தேன் "இதுவே எனது கடைசி சிறை வாழ்வு, இனி இந்த வாழ்வு வாழ்வதே இல்லை என்று." பிளேக் புட்டேனை எனக்கும் பிடிக்கும், முக்கியமாக அகமட்மீது நல்ல விருப்பம் இருந்தது. பொலீசில் பிடிபட்ட போது அங்கு பல தடவை போயிருந்தேன். அவர்களது சமர் வீட்டிற்கும் ஒரு தடவை போய் இருந்தேன், மிக உல்லாசமாக தமாஷாக இருந்தது. அகமத்துடனும் முதல் தடவையாக நன்கு கதைத்தேன். அப்படி ஒரு அருமையான உரையாடல் அது. எனது பிரச்சனைகள் பற்றியது அல்ல.

**கேள்வி:**

அப்படி என்ன அகமத்திடம் உனக்கு மிக விருப்பமானது?

**பீற்றர்:**

எனக்குத் தெரியவில்லை. எனது வாழ்க்கையைப் பற்றி அமைதியாக, ஆறுதலாக பேசினேன். முதல் தடவையாக ஒரு பெடகோவிடம் பேசியது அவரிடமாகத்தான் இருக்கும். அப்படி ஒரு அமைதியாக ஆறுதலாக நாம் ஒருமித்து அமர்ந்து, நான் என்ன செய்தேன், எதற்காக அதைச் செய்தேன் என கூறும்போது.... நான் எவ்வளவு மடைத்தனமான வேலை செய்துள்ளேன் எனும் உணர்வு வராமல், நான் செய்தது பிழையே என எண்ணும்படியான உரையாடல் அது. எப்படி அதை நான் விபரிப்பது. ஓ...! மிக இதமான.... மனம் கவர்ந்த... ஒரு... உரையாடல்... அது!

**கேள்வி:**

இன்னும் பிளேக்புட்டேனில் உன் பெயர் பதிவில் உள்ளதா?

**பீற்றர்:**

நான் 18 வயதாகும் வரை அகமத் எனது தொடர்பாளர் என பதிவில் உள்ளது. அகமத் கூறுகிறார் அதை நாம் கணக்கெடுக்கத் தேவை இல்லை நாம் தொடர்ந்தும் கதைக்கலாம் என்று. அகமத் எனது வாழ்க்கைக் கதையை எழுதும்படி தொடக்கியுள்ளார். நான் கொஞ்சம் பின்னிழுக்கிறேன். என் எண்ணத்தில் வருபவைகளை எழுதுகிறேன். இதில் பெருமைப்பட ஏதுமில்லாமல் இருக்கலாம். ஆனால் 30 வருடத்தின் பின்னர் வாசிக்க ஒருவேளை சுவையாக இருக்கலாம். அப்போது ஒருவேளை இப்படி ஒரு மனிதன் வாழக்கூடாது என எண்ணலாம். எனது பிள்ளைகளை இப்படி வழி நடத்தக் கூடாது எனவும் கூறலாம்.

**கேள்வி:**

பிரச்சனைகள் உள்ள குழந்தைகள் இள வயதினருடன் வேலை செய்யும் போது எது முக்கியம் என்று கருதுகிறாய்?

**பீற்றர்:**

தொடர்ந்து முயற்சி செய்யுங்கள், இடையில் நிறுத்திவிடாதீர்கள். உங்கள் கோப தாபங்களைக் கட்டுப்படுத்தி அவர்களை மாண்டு போகவிடாமல், கெட்டவர்களுடன் சேர விடாமல் பாருங்கள். நன்கு உணர்ந்து பாருங்கள் அவர்கள் வீட்டில் ஏதாவது பிழை நடக்கிறதா என ஆராயுங்கள். அங்கு, குடும்பத்துள், வீட்டில், பிள்ளை எப்படி உள்ளான் என்று கண்டு பிடியுங்கள்.

அகமத் (தலைவர்) கூறுகிறார்:
95ஆம் ஆண்டிலிருந்து பீற்றருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஏதும் வரவில்லை. அதிலிருந்து சாதகமான முன்னேற்றம் இருப்பதாக தெரிந்தது. பையன் மீது எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இன்று இடையிடையே சந்தித்து வாழ்க்கையைப் பற்றி கதைக்கிறோம். அவன் தானாக பயிற்சி இடமும் தேடி, வேலையும் தேடிக் கொண்டான். தான் உடைத்து களவு எடுத்த நிறுவனங்களுக்கு சிறுகச் சிறுக பணத்தை கடன் போலச் செலுத்தி வருகிறான். தனது தந்தையுடனும், HANDELS SCHOOLல் படிக்கும் தனது காதலியுடனும் நல்ல தொடர்பு வைத்துள்ளான்.

கேள்வி:
பிரச்சனைகளால் அழுத்தப்பட்ட சூழலில் வாழும் குழந்தைக்கும், இள வயதினருக்கும் அச் சூழலில் இருந்து உடைத்து வெளியே வர என்ன உதவி செய்யலாம்?

அகமத்:
"பிள்ளையும், அதன் குடும்பத்தினரும், பிள்ளையுடன் சம்பந்தப்பட்டோரும் தொழிற்திறமை வாய்ந்தவர்களுடன் தொடர்பு கொள்வதே தீர்மானமான முடிவு. கிரிமிகல், அன்பு ஆதரவு அற்ற நிலை, மொழிப் பிரச்சனை எனப் பல வழிகளில் குழப்பங்கள் வரலாம். இப்படித் தொடர்பு கொள்வதன் மூலம் அவர்களது துன்பச் சுமை, துன்ப மூட்டை அவிழ்க்கப்படுகிறது. அங்கு எந்தப் புள்ளியில் இருந்து நாம் தொடர்ந்து வேலை செய்வது என கண்டுபிடிப்போம். இவர்களுடனான தொடர்பு காலகட்டத்தில் தன் நம்பிக்கை, மரியாதை, ஏற்றுக்கொள்ளல், பதிலளித்தல், நம்பிக்கை என்பன மூலமாக இருக்க வேண்டும். நாம் நாமாக இருக்க வேண்டும். நாம் தந்தையாக இருக்க வேண்டும் என்பதல்ல. ஆனால் சுத்தமான அன்பைக் காட்ட வேண்டும். நாம் பல முகப்புகளைக் கொண்டவர்கள், இப்படி வேலை செய்யும் போது அதை அகற்றி விடுகின்றோம். தொழில் சம்பந்தமாக நாம் வாடிக்கையாளர்களிடம் இடை வெளி வைத்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அது சுத்த மடமைத்தனம். எனதும், எனது சக ஊழியர் களினதும் ஈடுபாடு நல்ல கருத்துடன் உள்ளது. நாங்கள் நேருக்கு நேர் எதிர்கொண்டு தனிப்பட்ட முறையிலும், கருத்துடனும், தொழில் நிபுணத்துவத்துடனும் வழக்குகளில் நடந்து எங்களை யார் எனக் காட்டுகிறோம். காரணம் ஒரு மனிதனுக்கு முதல் தேவை தனிப்பட்ட முறையில் கதைப்பதே. அதற்குப் பின்பே தொழில் ரீதியான தேவை வரும்."

"சமூக மாதிரியை உடைத்தவர்கள்" என்ற ஆராய்ச்சிக்கு பெயர் கொடுத்த 180 பேரில் லைலாவும் ஒருவர். இங்கு இருவர் லைலா வாழ்வில் முக்கியமானவர்களாக இருந்தனர். ஒருவர் இறந்துவிட்ட பூமிசாத்திர ஆசிரியர், பாடசாலை நேரம் முடிய தனது வேலை அறையில் லைலாவுக்கு கொக்கோ பால் கொடுத்து, கதைகள் வாசித்து தமாஷாக இருந்தவர். மற்றவர் பெடகோ காரின் கெய்சிங் (KAREN GJESING) சிகிச்சை நிலையத்தில் ஒன்றாக இருந்து உயர் வகுப்பு கல்வித் தொப்பியை மாட்டிவிட்டு, லைலாவுடன் விழா கொண்டாடியவர்.

லைலாவின் மூன்று வயதில், பெற்றோர் விவாகரத்து எடுத்தபோது, மூன்று தம்பிமாரும் லைலாவும் ஆதரவற்ற குழந்தைகள் விடுதிக்கு வந்தனர். அவர்கள் திரும்பவும் தாயிடம் வந்தபோது, புதிய சிறிய தந்தை லைலாவுக்கு அப்பாவானார். தாயும் தந்தையும், நாயும் பூனையும் போல வாழ்ந்தனர். இறுதியில் சிறிய தந்தை பைத்தியமான நிலைக்கே வந்துவிட்டார்.

லைலா கூறுகிறார்:
"கைகளைக் கீறிக் கட்டுகளுடன் தரிந்தார், தற்கொலை முயற்சிக்குப் பல தடவை முயன்றார். கழுத்தை நெரிப்பது, பொருட்களை எறிவது, கோடரியை எறிவது என அம்மாவைப் பயமுறுத்தி கொல்லவும் முயன்றார். பதிலுக்கு அம்மாவும் கத்தியை எறிந்தார். இவைகள் எம்மை எந்த அளவு பாதிக்குமென அவர்கள் சிறிதளவு கூட எண்ணிப் பார்க்கவில்லை. நாங்கள் பார்க்க அம்மாவை துன்புறுத்துவது அப்பாவுக்கு விளையாட்டாக இருந்தது, அம்மாவுக்கு வெட்கமாக இருந்தது." என்கிறார் லைலா. இவர்கள் LOLLANDக்கு மாறினார்கள். அங்கும் சமூகம் இவர்களை ஏற்கவில்லை. பையன்கள் துடுக்குத்தனமாகவும், அழுக்காகவும் இருந்தனர். லைலா பெண் என பரிதாபப்பட்டனர். பெரிய சகோதரன் உணவு தேடிக் கொடுத்தான். லைலா அவர்களைக் கவனித்துப் பார்த்தாள்.

லைலா கூறுகிறார்:
நான் 1ம் வகுப்புக்கு வரும்போது மனோதத்துவ இயலாளரிடம் அனுப்பப்பட்டேன். அவர் சோதனை செய்து எனக்கு "தலையில் எந்தப் பிழையும் இல்லை" என்றார். வகுப்பில் நான் வயதில் சிறியவளானாலும் எனது துரித முன்னேற்றத்தால் ஒரு தடவை இரட்டை வகுப்பேற்றம் கிடைத்தது. ஒரு வகுப்பைத் தாண்டிக் குதித்தேன். தொடர்ந்தும் மிக சுறுசுறுப்புடன் இயங்கினேன். சகோதரர்கட்கு வகுப்பில் பிரச்சனைகளாக இருந்தது. மற்றவர்களை அடிப்பது, பாடசாலைக்குச் செல்லாமல் கள்ளம் பண்ணுவதாக இருந்தனர். ஒரு தடவை இருவர் சேர்ந்து வாத்தியாரையே அடித்தனர்.

இன்று 3சகோதரர்களும் கிரிமினல்-தூள்பாவனை-விவாகரத்து-உபகாரப்பணம் என வாழ்கின்றனர். லைலா தனது முழுச் சக்தியையும் பாடசாலையில் செலவாக்கினார். ஒரு நாள் லைலாவுக்கு வருத்தம், தாயார் வீட்டில் இல்லை, அயலவர்களை பூமி சாத்திர ஆசிரியரிடமும் மனைவியிடமும் வந்தாள். இங்குதான் கொக்கோ பால் பெற்று பின்பு அது பழக்கமாகி பாடசாலை முடிய அங்கு செல்வது என்பதாகியது. அவர்களிடமிருந்து ஒரு தடவை ஒரு சமூக ஆலோசகரின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்று லைலா வீட்டிலிருந்து விலகி, குழந்தைகள் இல்லத்தை அடைந்து வளர்ந்தாள். சிறிது வளர்ச்சியடைய மனையியல் பாடசாலைக்கு வந்தாள். அங்குதான் பெடகோகாரின் கெய்சிங் இருந்தார்.

வார இறுதிக்கும், கிறிஸ்ற்மசுக்கும் லைலாவைத் தனது வீட்டிற்கு அழைத்துப் போய் அன்பைப் பொழிந்தார்.

லைலா:
காரினே ஒரு குடும்பம் எப்படி இருக்கவேண்டும் என சொல்லித் தந்தார். பொருளாதாரத் தன்னிறைவே எல்லாவற்றிற்கும் வழி வகுக்கும் என்ற முக்கிய உண்மையை எனக்கு தெரியவைத்தார். மனிதன்தானே தனக்கு ஊட்டமளிக்க வேண்டும். அதுவே எனது அடிப்படை யாகவும் இருந்தது. அதனாலேயே எப்போதும் என்னைத் தயாராக்க படிப்பை எடுத்துக் கொண்டேன். என் அம்மா தன்னிச்சையாக இருக்க முடியவில்லை. எப்போதும் சூழலையோ மற்றவரையோ சார்ந்தே இருந்தார்.
கேள்வி,
சமூக மாதிரியை உடைத்ததற்கு எதை நீ மூலப் பொருளாக உன் கருத்தில் எடுத்தாய்?
லைலா:
நான் என் எண்ணங்களையும் முடிவுகளையுமே பெரிதாக நம்பினேன். அவை சரியாகவும் எனக்குப் பட்டன. என் உள்ளுணர்வுகளையே நான் நம்பவேண்டி இருந்தது. ஏனென்றால் வேறு எதுவுமே எனக்கு நம்பக்கூடியதாக இருக்கவில்லை.

கேள்வி:
குழந்தை, இள வயதினரின் பிரச்சினைகட்கு உதவும் தொழில் துறை வல்லுனர்க்கு நீ கொடுக்கும் அறிவுரை என்ன?
பதில்:
சமூகத்தில் சிறிது கோணலாகத் தெரிபவர்கள் மீது நிறைய கண் ஓட்டம் விடுங்கள். மிக பருமனானவர்கள், சிவப்பு மயிர் உடையவர்கள், வாணம் பூசுபவர்கள், பச்சை குத்துபவர்கள், சிறிது வித்தியாசமாகத் தெரிபவர்கள் மீது. இவர்கள் "தமக்கு உதவி தேவை" என குரல் கொடுக்கின்றனர். மற்றவர் கவனத்தை தம்மீது திருப்ப முயல்கின்றனர்.

எனது அதிஸ்டம் எப்போதும் என்னை நம்பக்கூடியவர்களும், அன்பு பொழிந்தவர்களும் என்னுடன் இருந்தனர். அன்பு கொண்ட பெரியவர் களின் தொடர்பு, தன்னம்பிக்கையும், நானும் பெறுமதி மிக்கவர் என்ற உணர்வையும் தர வல்லது என்பது மிகவும் தெளிவானது. நான் 18 வயது முடியும் வரை காரின் எனது தொடர்பாளராக, பாதுகாப்பாளராக இருந்தார். இன்று கூட ஏதும் முக்கியமானவை என்றால் உதாரணமாக எனது திருமணம் போன்றவை காரினுக்கே முதலில் கூறுகிறேன்.

காரின்:
காரில் வரும் போதே, இனி தான் ஒழுங்காக இருப்பதாக முடிவு செய்ததாக லைலா கூறினாள். அதன்படியே நடந்தாள். தன் 13 வயதில் லைலா கூறினாள் " தனது தலையில் பிழை ஏதும் இல்லை" என மனோவியலாளர்

கூறியதாக. அது மிக முக்கிய வாசகமாக அவளுக்கு இருந்தது. லைலா விடம் ஒரு அதீத சக்தி இருந்தது. அவள் எப்போதும் அன்பான, சந்தோசமான மன நிலை கொண்டவள். இவைகள் ஒருவனின் முன்னேற்றத்திற்கு தடைக் கல்லாக இருக்காது. எனக்கும் இவைகள் பிடித்திருந்தன. எங்கிருந்துதான் அவளுக்கு அந்த புத்துணர்வு வந்தது என்பது எனக்கு தெரியவில்லை. இப்படி கொடுமைகளுக்கு ஆளான பெண்களிடம் இல்லாத ஒரு உணர்வு அவளிடம் இருந்தது. இதனாலேயே அவளைச் சுற்றி இருந்திவர்களால் அவளைக் காப்பாற்ற முடிந்தது.

**கேள்வி:**

தொழில் துறை வல்லுனரின் பங்களிப்பு எவ்வளவு தூர எல்லைக்கு போகும் என்பதில் உன் கருத்து என்ன?

பதில்:

"பெடகோ அறிவின் கீழ் ஒரு நிதானம் உருவாகின்றது. அதுவும் இப்படியான பிள்ளைகளுடன் வேலை செய்யும்போது இந்த அறிவு மிக முக்கியம். காரணம், உணர்ச்சிகள் அடிக்கடி வந்து நம் செயல் முறைகளை கட்டுப்படுத்தும், நீண்ட தூரத்திற்கு வழி நெடுகிலும் வரலாம். இதற்கு உறுதியான தொழில் அறிவு, அடிப்படையாக, அத்திவாரமாக, பின்னணியில் இருக்கவேண்டும்....." என்று முடிக்கிறார்... காரின் கெய்சிங்.

---

# நிசப்தா!

—பூமி

காலை ஆயிற்று. எழுதல் வேண்டும்.

சன்னலை வெண்ணிறம் பூசி நகைக்கின்ற சூரியனை காணவில்லை. குளிர் போர்த்தி அதை மீண்டும் உறங்க வைக்கப் பார்ப்பது போல ஒரு கற்பனை. அடிக்கிற காற்று ஆட்டிக் கொண்டு வெளிக்கிட்டு நிற்கிறது. இலையற்ற மரக் கிளையோடு காற்று சண்டை பிடிக்கிறது.

மகனும், மருமகளும் இந்தக் குளிருக்குள்ளால் இப்போது புகையிரதத்தைப்

பிடிக்க ஓடிக்கொண்டிருப்பார்கள்.

எனக்கு வயசாகிவிட்டது.

இந்த அறையும், சமையல் உதவியும், விளங்காத பாசையில் தொலைக் காட்சியை பார்ப்பதும்..........

எழுந்துவிட மனமில்லை. எழுந்துதான் என்ன செய்வது. வயோதிப காலம். எதிலும் உப்பற்ற உணவாய் வாழ்க்கை. உணவுள் சேராத உப்பை நக்கியது போல மனதுக்குள் கோபம்.

எல்லாம் கடந்து அறைக்குள் அடைபட்ட வாழ்வும், சப்தமற்ற பிரபஞ்ச வாழ்வை இப் பூலோகத்தில் அனுபவிக்கின்ற வாழ்வும், இவை ஒன்றும் வேண்டாமென மனம் அள்ளி எறிய நினைக்கின்றது.

இனி என்ன செய்வது.... என்று யோசிக்கமுடிந்த தூர மறை நீளும் விடையற்ற கணக்காய், எனது வயோதிப வாழ்வு.

வண்டின் காலுள் அகப்பட்ட சாணி உருண்டை போல் போகிறது.
போகட்டும்.

எல்லாமே போகட்டும்.
வெளியே கிடக்கும் சினோவை எனது மனம் அள்ளி திட்டித்திட்டிக் கொட்டுகிறது.
காலை ஆயிற்று எழுதல் வேண்டும்.
சப்தங்கள் எங்கே? எல்லாமே நின்று போயிற்றா?

எனது இதயம் அடிக்கும் ஒலியை கேட்டுப் பார்க்கிறேன்.
யாரோ படிகளால் இறங்கி வருவது போல கேட்கிறது.

அதிகாலை கூவும் சேவலும்,
குருவி, அணில் சப்தங்களும், குரல் கொடுக்கும் மாடுகள்.....
வயலுக்குப் போகும் வண்டில் சப்தம், காலை பஸ்சின் சுடும் இரைச்சல்....
இப்படி சப்தங்களால் காலை நிறைந்திருந்ததே ஒரு நாள்.

இன்று
வெண் பனி ஆடி இறங்கி அசைந்து நிலத்தில் மெல்ல சப்தமின்றி இறங்கி....
அது சப்பதமின்றிக் கரைந்து போவது போல்;
எனது அந்திம கால வாழ்வு டென்மார்க்குக்குள் அடைபட்டுக் கிடக்கிறது.

சப்தமின்றி ஒரு பெருமூச்சு காலெடுத்துப் போகிறது.

என்னை எப்போதும் நிசப்தமே அழைத்துக்கொண்டு சுற்றுலா போகிறது.

இனி... மகனும், மருமகளும் பாடசாலையால் வந்து கதவு திறக்க திறப்பு நுழைக்கும் சப்தம் கேட்கும்வரை.... இதே நிசப்தத்துள் படுத்துக் கிடக்க வேண்டும்.
சரி
கலை ஆயிற்று. எழுதல் வேண்டும்.
எங்களூர் சந்தைச் சப்தச்சுவை நாவில் மீண்டும் இனிக்கிறது.
ஆனால்,
இந்த நிசப்தம்; அதையும் பறித்துச் சாப்பிடுகிறது.

அதோ!
தூரத் தெரியும் அந்த மரத்தடியில், ஒரு நாள் ஒரு பையன் பந்தடித்துக் கொண்டிருந்தான்.
இப்போதும் அவன் அவ்விடத்தில் பந்தடித்துக் கொண்டிருப்பது போலவே தெரிகிறது.
கலையிலிருந்து மாலை வரையிலும், இரவிலும் கேட்டுக் கேட்டு வளர்ந்த அந்த எனது ஊரின் சப்தங்கள் என்னுள் இப்போதும் ஒவ்வொன்றாய் கேட்கின்றன.
கண்களை மூடிக்கொள்கிறேன்.
இப்போது அச் சப்தங்கள் நன்றாக, கூர்மையாக கேட்கின்றன.
கண்களை மீண்டும் திறந்து உடைக்கிறேன்.
வடதுருவ நிசப்தம் "மீண்டும் வருக" என்று எனக்கு மாலை சூடுகிறது.

காலை ஆயிற்று. எழுதல் வேண்டும்.
கரைந்து கிடக்கும் காற்றை, கட்டி அணைத்துக் கேட்கிறேன்;
"சப்தமிடு" என்று.
"போடி" என்கிறது அது.
ஓம்
ரெலிபோன் அடிக்கிறது. எடுக்கிறேன்.
"என்ன வவுனியாவிலிருந்தோ"
பிலத்துக் கதையுங்கோ! கேக்கேல்ல!! என்கிறேன்.
காலை ஆயிற்று. எழுந்து நிற்கிறேன்.

(முற்றும்)

## சஞ்சீவி ஆறு மலர்களுக்கான சந்தாவிபரம்.

| | |
|---|---|
| DENMARK<br>NORWAY<br>SWEEDAN | 125 kr. |
| AUSTRALIA<br>CANADA<br>FRANCE<br>GERMANY<br>ITALY<br>LONDON<br>SWITZERLAND | 25 US $ |

" மறுக்கப்பட்டு பழக்கமற்றுப் போனதொரு
சுதந்திரமான கருத்துப் பரிமாறலை
உருவாக்குவதற்கு எல்லோரதும்
கருத்துக்களும் விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

சஞ்சீவி
CHANCHIVE
NYGADE 22 , 7500 HOLSTEBRO
DENMARK.